# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு உ௮ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௪, ஐப்பசி நவம்பர், 1953 | பரல் ௫


## பண்டிதமணி மறைவு

பண்டிதமணி என்றால் தமிழகம் முழுதும் அறியும்; நாடறியும், நகரறியும், வீடறியும், ஏடறியும், கடல்கடந்த நாடுகளும் அறியும். அத்தகைய தமிழ்ப்பேரறிஞர் முதுபெரும் புலவர் பண்டித மணியார் கதிரேசனார், சென்ற 24-10-53ல் இறைவன் திருவடிப் பேறுற்றார்கள்.

இவர்தம் மறைவால் கலைவானம் மங்கிக் கிடக்கின்றது; கலைவானில் ஒளிவிளங்கித் தோன்றும் ஞாயிறு அவர். பாட்டுக்கு ஒருமணியாக, நாட்டுக்கொரு பெரும்புலவராக விளங்கினார். அவர் பிரிவு ஈடுசெய்ய வொண்ணாத வொன்றாகும்.

கடல்மடை திறந்தெனத் தட்டுத்தடையின்றிப் பேசும் நாநலங்கனிந்த நாவலர் காவலர்; பாநலம் பயின்ற பண்பினர்; வடமொழி வல்ல மாண்பினர்.

கலை ஊற்று; இன்பச் சுரங்கம்; அன்பின் ஆறு; அறிவுக் கடல்; தெருளின் ஒளி; சைவ ஞாயிறு, மெய்ம்மைக்கேணி; அறத்தின் ஆணி; மறத்தின்வாள்; தமிழ்வளம் இன்று தணந்தது! சாய்ந்தது!

அன்றோர் புலவர், பெருஞ்சாத்தன் என்னும் ஓர் வள்ளல் பிரிவுக்கு வருந்தி,

'முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே'

என, அஃறிணையுலகை விளித்து வினவிக் கதறினார்.

அதியமான் அஞ்சியின் அரும்பிரிவுக்கு ஆற்றாத ஔவை மூதாட்டியார்,

‘ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப், பாடுநரும் இல்லைப் பாடுநர்க்கு ஒன்று
ஈகுநரும் இல்லை’

என, அழுது சாம்பினர் அவன் பண்பைப் பாராட்டி. அளந்து கொடையறியாக் கோச்சேரமான் இறந்தகாலை,

‘மைந்துடை யானை கைவைத் துறங்கவும்
திண்பிணி முரசம் கண்கிழிந் துருளவும்
காவல் வெண்குடை கால்பரிந் துலறவும்
காலியற் கலிமாக் கதியின்றி வைகவும்
மேலோர் உலகம் எய்தினன்’

எனக் கூடலூர்கிழார் வாய்விட்டுக் கதறிப் புலம்பினர்.

இன்று யாம் பண்டிதமணியார் பிரிவுக்கு எச்சொல் எடுத்துப் புலம்புவது! அவர் பெருமை அளத்தற்கரியது! அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் சொல்லினளவேயாம் அதற்கு எல்லை. அவர் பிரிவை நினைந்து நினைந்து அறிஞருலகம் அலமருகின்றது! சைவ உலகம் தத்தளிக்கின்றது! காவிய உலகம் கதறுகின்றது! ஓவிய உலகம் உலைவுறுகின்றது! புலவர் உலகம் புலம்புகின்றது! செந்தமிழ்த்தாய் நைந்து நைந்து உருகுகின்றாள்! இந்நிலையில்,

மண்ணும் மருள, மலையும் கனிய, நீரும் கொதிக்க, நிழலும் சுழல, அருங்கலைஞர் பண்டிதமணி, முதுபெரும்புலவர், மகாமகோ உபாத்தியாயர், மு கதிரேசச்செட்டியாரவர்கள் மறைந்தார்கள். அவர் மறைவு கருதி,

‘ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நானிலாவி யிருப்பனென் னாதனை’

என, இறைவனை அப்பர்பெருமான் பரவியதொப்ப, யாமும் உள்ளங்கசிந்து நெக்குருகுகின்றோம்.

இன்று பண்டிதமணியார் பறந்தார்! கலைப் பறவையன்றோ பறந்தது! செழுங்கலை வாணர் சென்றார்! செந்தமிழ்ச் செல்வமன்றோ சென்றது! கலையும் பண்பும் அன்பும் அறமும் வீரமும் நேர்மையும், வேர் கவடு தளிர் இலை காய் கனிகளாக அமைந்து நின்ற அரிய தருவன்றோ சாய்ந்தது! தமிழ்மண்ணில் வேரூன்றி ஓங்கி உயர்ந்த கொடுமுடிகொண்ட மலையன்றோ வீழ்ந்தது! இம்மணியின் பிரிவு குறித்து நாடெல்லாம் மறுக்கங் கொண்டுளது! இத்தகைக் கலைஞர் நம் நாட்டிடை இனி எக்கால் தோன்றுவரென அறிவறிந்த இளைஞருலகம் ஏக்கங் கொள்கின்றது!

வடமொழி தென்மொழிக்கடல், அதன்சுவை என்பெல்லாம் உருக்கும்; தெள்ளத்தெளிந்த கதிர், அதன் ஒளி நினைப்பவர் நெஞ்செல்லாம் விளக்கும்; இன்பமேகம், அதன் நீர்மைப் பொழிவு கல்லையும் கரைக்கும்; கனிவிக்கும். இத்தகை உருக்கமிக்கவர் நம் பண்டிதமணி கதிரேசனார்.

பண்டிதமணி வடமொழியில் வல்லுநராயினும், 'மணிப்பிரவாளம்' எனனும் கலப்புத் தமிழ்நடை அவர்கள் எழுதிய நூல்களில் விரவுவதில்லை. அவர்கள் கலப்புத் தமிழ்நடை, தமிழை வளம்படுத்தாதென்னும் ஊன்றிய கருத்துடையர். இது முறுகி வளர்தற்குக் காரணம், மறைத்திரு மறைமலையடிகளாரின் வளர் தொடர்பே.

இவர்கள் கலைத்திறனைப் பாராட்டிப் பட்டங்கள் பல சார்ந்து, அவை பெருமையுற்றன. பட்டத்தால் பெருமை பெறுவார் பலர், பட்டம் சிறப்புற்றது கதிரேசனாரால். பண்டிதமணியென்றால் பிறரைக் குறிக்காது இச் சான்றோரையே குறித்தல் ஓர்க. பண்டிதமணிப் பட்டம் இவர்களைத் தோற்றுவித்த மேலைச்சிவபுரி சன்மார்க்கசங்கச் சார்பிலும், முதுபெரும் புலவர்ப் பட்டம் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கச் சார்பிலும், மகாமகோ உபாத்தியாய பட்டம் அரசினரால் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சார்பிலும் வழங்கியனவாகும். இப் பட்டங்களும் மணியாரைப் பிரிந்தன!

ஒரு நூலின் சொற்கள் சொற்றொடர்கள் நம்போன்றார்க்கு வெறுங் கற்பனையாக—எதுகைமோனைத் தொடைக்கமைந்த சொற்களாக—சொற்றொடர்களாகத் தோன்றும். நம் கதிரேசனார்க்கு அரிய கருத்தாகக் கற்பனையாக-கலைவினை பயனாக-அரிய காட்சியாகக்-காட்சி தரும். இவர்தம் கலைத்திறங்கண்டவராகிய மறைந்த தென்றல் திரு. வி. க. ஒருகால் பண்டிதமணியாரைப் பாராட்டுமுகமாக, 'கதிரேசனார் காவியமானார்; காவியம் கதிரேசனாராயிற்று' என, அவர்தம் செந்நா புகழ்ந்தது. அத்தகைய வாய்ப்புப்பெற்றவர் நம் பண்டிதமணி. எழுத்தெண்ணி, எழுத்தின் திறனறிந்து கற்றவர் நம் பண்டிதமணி; நுனிப்புல மேய்வார் உலகுவேறு, கதிரேசனார் உலகுவேறு! 'இருவேறு உலகத்தியற்கை' என்னும் செந்நாப் போதார் திருமொழியைக் கடந்தவர் நமபண்டிதமணி. இத்தகைச் செம்மைசான்ற நங்கதிரேசர் கலைபிழிவுத் தீஞ்சாற்றை மாணவர் மனத்திலே—கலைஞர் காதகத்திலே—சுவைஞர் உள்ளத்தடத்திலே - ஓடி நிரம்பிப் பெருகி நிலைத்து நின்று மகிழுமாறு ஊட்டுவார்; ஊற்றுவார். சொற்பொழிவின் இடையிடையே நகைச்சுவை தோன்றும்; அது தூங்குவோரை எழச் செய்யும் துடிப்புடையது. அதனிடையில்

நுண்கருத்து ; அறிவுநுட்பம் மிளிரும். பின்னர்க் கருங் கொண்மூ மின்னென மறையும் பண்டிதமணி பேச்சு எல்லை யற்றது. அவர் பேச்சே தனிக்கலை ; அதை அவர்களுடன் தோய்ந்து பழகினோ உணரவர். அவர் பேச்சில வெற்றுச் சொற்கள், வேண்டா வெறுப்புத்தரும் மொழிகள் இல்லை

'கேட்டாரப் பிணிக்கும தகையவாயக் கேளாரும்
வேட்ப மொழிவதாம சொல்'

என்னும் பெருநாவலர் ஒரு மொழிககு இலக்காக இலகியது நம் பண்டிதமணி பேசசுநடை. அவா வாயினின்றும மலாவன தமிழ், பழந்தமிழ்நாடு, பரநத தமிழ்நாடு, அதன் கலை பணபு மாண்பு வள்ளன்மை புலமை இவைகளே.

1940 நவமபர் 30, திசம்பர் 1-ஆம் நாட்களில் நம கழகச் சார்பில் சென்னையில் நிகழநத குறுநதொகை மாநாட்டுககுத் தலைமை தாஙகி விரிவுரையாற்றி அஙகுக் குழுமிய அவையினரை இன்பக் கடலில் மூழ்குவிததார்கள. 'குறுநதொகை'க கடவுள வணக்கச் செய்யுட்கு இவர்கள் விரித்துரைத்த உரைவளம மிகக சிறப்புக்குரியது. அச் செய்யுளில அமைநதுள்ள கருத்து நயம், கருப்பொருள், உரிப்பொருள, உவமையழகு முதலிய யாவறறையும் தம் அஃகி ஆழ்ந்தகனற அறிவுத திட்பததால யாவரும உரை விளக்கியுளளாாகள். அபபேருரை அவர்கள தலைமைப் பொழிவு. அது, 'குறுநதொகைச் சொறபொழிவு என்னும் எம் வெளியீட்டு நூலில் வெளிவநதுளது.

எம்மால் தமிழ்நலங்கருதி வெளியிட்டு வரும 'செநதமிழ்ச செல்வி' என்னும் திங்கள் இதழுககுப பல்லாண்டுகள இதழா சிரியர் கூட்டதது உறுப்பினர்களில ஒருவராக அமாந்து பல தலைப்புகளில் அரியபெரிய கட்டுரைகள வழங்கியுளளாாகள அவை கருத்துவளம், திட்ப நுட்பம, இலக்கிய நயம, சமய நுண்மை செறிந்தவைகளாக உள்ளன.

எம் செநதமிழ்ச் செல்வி வரி நெடும்புத்தகத் தெழுதிய எம் தமர் பெயர், இப்போது பெயர்தற்கு மனநதுணுககுறுகின் றோம்! மரீஇப்பின்னைப் பிரிவு வருந்துதற்கிடனன்றோ! யாது கழறுவது? உலக நிலை ஒன்றொன் றொருவழி நில்லா நிலையாமைத் தன்றோ !

இத்தகைய அறிஞரைத் தமிழகம் நன்கு பயன்படுததிற் றில்லை. இற்றைநாள் தமிழகத்துக்குப பயன்படுத்தவும் தெரி யாது. அவ்வாய்ப்பை அது பெறவுமில்லை. அதறகுக் காரணம் தனித் தமிழரசு அமையாததே. தமிழகம் ஒருதலைப்படவில்லை; அது நான்குபுறமும் சிதறுண்டுக் கிடக்கின்றது. தமிழரசு

அமைந்திருப்பின் நம் பண்டிதமணியைப் பயன்படுத்தியிருக்கும். நம் மணியாரைச் சிறைகாத்திருக்கும். அவர் இருமருங்கிலும் கலைத்துறை முற்றிய இளம்புலவர் பலரை இரவும் பகலும் இருத்தியிருக்கும்; நம் மணி வாயில் எத்தமிழ் முத்துக்கள் உதிர்கின்றன என ஏக்குறாது நிற்கச் செய்திருக்கும். மணியின் மலர்வாய் எதனை உமிழும்? தண்ணார் தமிழை, அவ்வறத்தையன்றோ? அவர், அக்கலைத்தேறலை, ஆணிமுத்துக் கோவையை வடிப்பர், சேர்ப்பர்; குவிப்பர்; அவை தமிழகத்துக்கு என்றும் கெடாத வான கலையான—தமிழுருவான—செழுங்கலைச் சேம வைப்பான—நூலாகக் கிட்டும் அந்நூற்கள் தமிழ், தமிழகத் தொன்மை முதலியவற்றை நல்கும். அது நாட்டை வளப்படுத்தும் அதனால் தமிழன் நாகரிகப்பண்பை எல்லா நாட்டுக்கும் எடுத்து நவிலும். அவ்வரசு அமையாததால் இன்று தமிழகம் தமிழ்த்தொன்மையை மறந்தது! நாட்டுநலத்திற கால் கொண்டிலது! கலைக்கருத்தைக் கைவிட்டுளது! பண்பின் தலைப் பிரிந்தது! தனித்தமிழில் எழுதப்-பேசக்-கூசுகின்றது. தனித்தமிழ் கூடா என்பார்க்கு மணியின் 'உரைநடைக் கோவை' என்னும் கட்டுரை நூலொன்றே சாலும்! தன்னுரிமை பெற்ற பண்டைத் தமிழ்நாடு உயர்கலை பெற்றோங்கி யிருந்தது. இன்றோ இந்நிலை! அந்தோ தமிழ்நாடே! உன் பக்கல் நாடுகள் கலைஞரை-புலவரை-எப்படிப் பயன்படுத்துகின்றன? உனக்கு எக்கால் இப்பண்பு கிட்டுமோ அறியோம்!

வங்கநாடு கவி இரவீந்திரநாதரை எப்படிப் பாராட்டியது, பாராட்டுகின்றது? இங்கிலாந்து சேக்குப்பியரை எவ்வாறு உயர்த்துப் போற்றுகின்றது? இங்கிலாந்து இளைஞன் ஒருவனை 'சேக்குப்பியர் வேண்டுமா? இந்தியநாடு வேண்டுமா? இதில் ஒன்று கூறு' என, ஒரு நண்பர் அவனை வினவியபோது, அவன், 'இந்தியாவை இழப்பினும் இழப்பேன்; பிற வேறெதை இழக்க நேரினும் ஏற்றுக்கொள்வேன்; என் சேக்குப்பியரை ஒரு போதும் இழந்து இருக்கமாட்டேன்' எனக் கூறினன் என்ப.

அவ்வீறு நம தமிழகத்தே மலர்தல்வேண்டும்; நம் இளைஞருலகில் அதனைக் காண்கின்றோமில்லை. சேக்குப்பியர், ஃசெல்லி, பைரன் முதலிய கவிஞர்கள்பால் இங்கிலாந்து இளைஞனிடத்துத் தோன்றிய அன்பு, இன்று நம் தமிழக இளைஞன் திருவள்ளுவரிடத்துக் கொள்கின்றானா? இளங்கோவிடத்து அவன் மனம் எழுச்சி கொள்கின்றதா? இல்லை! இல்லை! என்றே கூறலாம்.

தமிழகம் பழம் பெருமை கூறுவதோடமைகின்றது. செயலில் கொணர அஞ்சுகின்றது! அண்மையில் தமிழகத்

தந்தை திரு. வி. க. மறைந்தார். அவரை யடுத்து இப் பெரியாரும் பிரிந்தார். அடுத்தடுத்து அறிஞர்கள் மறைவது தமிழ் நாட்டுக்கே பெரும் அதிர்ச்சி உண்டாக்குவதாகவுள்ளது. ஆக்க வேலை செய்யும் பெரியார் ஒருவரைக் காண்டற்கியலாவாறு இதுகாலை அருகியிருக்கின்றது.

> "பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
> கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்—அன்னோ
> பயனில் பொழுதாக் கழிப்பரே"

என்னும் பொன்மொழிக்கு நன்கிலக்காக நடப்பதே நம் தமிழக மக்களின் நிலையாகப் போயிற்று.

இலக்கணம் கைப்பது; புளிப்பது; இருப்புக்கடலை என்று கூறும் கூட்டம் நம் நாட்டிடை இன்றும் உள்ளது. அது இனிக்கும், சுவையுள்ளது எனக் கூறிக் காட்டிக் கல்லைப் பிசைந்து கனியாக்கும் வித்தை நம் பண்டிதமணியார்க்கு உண்டு. தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையத்தை மாணவரன்றிப் பிறரும் கதை கேட்பதுபோல் காது கொடுத்துக் கேட்குமாறு சொல்லவல்ல சொல்லின் செல்வர் நம் பண்டிதமணி! சமயம் குருட்டுவழி என்று கூறும் நாத்திகர்க்கு, சமயமே மக்களாக்குவது, விலங்கினின்றும் மக்களைப் பிரிப்பது எனத் தெருட்டி, அவர் உளங்கொள்ளுமாறு உரைக்கும் ஒண்மையர் பண்டிதமணி. திருவாசகத்தைத் தித்திக்கக்கூறி உரை காட்டுவார் நம் பண்டிதமணி. சிலம்பை, மேகலையை, தேவரை, திருத்தக்கதேவரை, கம்பரை, சேக்கிழாரைத் திறம்படக்காட்டும் திறலார் நம் பண்டிதமணி ஒருவரே. அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில் நம் மணி வீற்றிருந்தார்! இற்றைத் திங்கள் இவ் வெண்ணிலவில் மறைந்தார்! அவரை இழந்தோம்! ஆ! 'நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும் பெருமையுடைத்தன்றோ இவ்வுலகம்?

உலகில் மரையிலைபோல மாய்ந்திசினோர் பலர்! உரையும் பாட்டும் உடையார் ஒருசிலரே! நம் மணி உரையும் பாட்டும் உடங்கியைந்த பெரியார். அவர் பொன்றாப் புகழ், தமிழ்நாடு உள்ள அளவும், தமிழ் ஏடு நிலவும் வரையும் நின்று நிலவும். திருவாசகத் தேனுக்கு அவர் பேருரை பாலாகக் கலந்து இனிக்கின்றது! அதன் கருத்தில் தோய்ந்த பலர், களிப்பாரும், தேனிப்பாருமாக இலகிப் பண்டிதமணியின் பண்புடைமைப் பாராட்டுவர். நம்மிடையே கலந்து கருத்தில் நிலவுகின்றார் நம் கதிரேசனார். அந்தோ! திருவாசகம் முழுதிற்கும் அவர் உரைகாணும் முன் காலனும் கண்ணறை கவர்ந்தனன்! இவ் வளவேபோதும் தமிழ்நாடு செய்த தவப்பயன்!

இவர்தம் திறனை ஒருவாறு கண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஏற்றுப் போற்றியது. இவர் திறங்கண்டு போற்றிய பெருமை வள்ளல் இராசா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கட்கே உரித்து. அக்கழகத்தில் பன்னீராண்டு தமிழ்ப்பணி புரிந்தார்.

இத்தகையார் எங்கோ எப்போதோ இரண்டாயிரம் மூவாயிரம் யாண்டுகட்கு ஒருமுறைதான் தோன்றுவர். அவரைக் காலமுண்டாகவே காதலசெய்து பயன்படுத்திக்கொள்ளவேண்டுவது அந்நாட்டு மக்கள் கடன். அவர் பருவுடல் இன்று மறைந்தது. ஆனால், அவர் தந்த நுண்ணுடற்கூறுகள் நம்மிடையே இருக்கின்றன. அந் நுண்ணுடலாம அறிவுநூற் செல்வங்களை நமக்கு ஈத்துச் சென்றனர். 'ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே' என்பது முதுமொழியன்றோ? நாம் அவைகளைப் பயன்படுத்திக்கொண்டு வாழ்தலே சிறப்பு. அவை, வடமொழியினின்று அகழ்ந்தெடுத்த 'சுலோசனை', 'மிருச்சகடிகம்' என்னும் 'மண்ணியல் சிறுதேர்', 'சுக்கிரநீதி' முதலியனவும், 'உரைநடைக் கோவை' என்னும் கட்டுரை நூலும், 'திருவாசகக் கதிர்மணி விளக்கம்' என்னும் உரைநூல் முதலியனவும் பிறவும் ஆகும். இவைகளைப் பயில்வோர் அறிவுத் திறலோராய் மிளிர்தல் ஒருதலை. அஃதறிந்து யாவரும் பயிலுதல்வேண்டும் அதுவே, அவர்க்கு நாம் எழுப்பும் மணிமண்டபம்; நினைவுக்குறி. வெற்றாரவாரத்தால் பயன் இன்று. அவர் ஆன்மா இவ்வாரவாரச் செயலை விரும்பாது. ஆகவே, அவர் நூற்செல்வத்தைக் கற்றல் கேட்டல் சிந்தித்தலே செயற்பாலது; இன்றியமையாது நமக்கு வேண்டற்பாலது.

'அந்தோ! பண்டிதமணியாரே! அறிந்தோர் சொன்மலையே! பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே! முதுபெரும் புலவரே! மகாமகோபாத்தியாயரே! கதிர்மணி விளக்கக் கதிரேசனாரே! யாண்டுற்றீர்! யாண்டுற்றீர்!' எனக் கூறி வருந்தி மாழ்கினும் அவர் நம்மிடை வாரார், தோன்றார். செயற்பாலன அவர் நூல்களைக் கற்றல் கேட்டல்களே என ஓர்மின்!

பண்டிதமணியாரின் பிரிவாற்றாது வருந்தும் அவர் அருமைப் புதல்வர் புதல்வியர்கட்கும், விருப்பறாச் சுற்ற மேதகையாளர்க்கும் எம் ஆற்றொணாக் கடப்பாடுடைய வருத்தத்துடன் ஆறுதல் கூறுகின்றோம்.

பண்டிதமணியவர்களின் அரும்பெறல் ஆருயிர், இறைசிவ பெருமான் திருத்தாண் மலரில் ஒன்றி இன்பத் தேனுண்டு என்றும் இன்புறுவதாக!

—ஆசிரியர்.

# பண்டிதமணியின் மாண்பு

[திரு. ஔவை. சு. துரைசாமிபிள்ளை, மதுரை.]

முதுபெரும்புலவர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் இந்த நூற்றாண்டில் சிறந்து விளங்கிய புலவர் பெருமக்களுள் தலைமையிடம் பெற்றுத் திகழ்ந்தவர். தமது தனியுழைப்பு ஒன்றாலே உயர்ந்த பெரியவர். செட்டிநாட்டிலுள்ள மகிபாலன்பட்டியில் தன வணிகர்குடியிற் பிறந்து தமிழிலும் வடமொழியிலும் நல்ல புலமைபெற்று உயர்ந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராய் இருந்து தமிழ்ப்பணிபுரிந்து ஓய்வு பெற்றுத் திருவாசகத்துக்கு உரையெழுதும் பணியை மேற்கொண்டு அது முடியுமுன்பே மறைந்து இறைவன் திருவடிப் பெருவாழ்வு பெற்றார்.

மகிபாலன்பட்டிக்கு அப் பெயர் இடைக்காலச் சோழ மன்னர் காலத்தில் உண்டாயிற்று; அதற்கு முன்பெல்லாம் அவ்வூர் 'பூங்குன்றநாட்டுப் பூங்குன்றம்' என்று வழங்கிவந்தது. சங்ககாலச் சான்றோர்களுள் கணியன் பூங்குன்றன் என்னும் சான்றோர் இவ்வூரினர்; "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று தொடங்கும் பாட்டு அப் பூங்குன்றனாருடையது. பரந்த புலமையும் சால்புமுடைய அத் தக்கோர் நிலவிய ஊரே நம் பண்டிதமணிக்கும் பிறந்த வூராய்த் தமிழ்ப்பெரும்புலமை யெய்துதற்கு ஏற்ற இடமாய் அமைந்தது; இஃது அவர்கள் கருவிலே வாய்த்த தமிழ்த்திருவாகும்.

சான்றோர் பாராட்டும் தகவுடைப்புலமை எய்தியதும் பண்டிதமணியவர்கள் தாம் பயின்ற வடமொழிக்கண் சிறந்து நிலவிய நூல்களுள் சுக்கிரநீதியைத் தமிழில் மொழிபெயர்த்தார்கள். அதன்பின் சுலோசனை, மிருச்சகடிகம், உதயணகாவியம ஆகியவற்றை இனிய தமிழில் மொழிபெயர்த்தார்கள். பண்டிதமணியவர்கட்கு முன்னேரும் பின்னேருமாகப் பலர் தோன்றி வடமொழி நூல்கள் மொழிபெயர்த்தோர் உண்டு. அவர் பலரும் தமிழில் நிரம்பிய புலமையில்லாக் குறையால் கற்பவர் விரும்பத்தக்க நிலையில் அம்மொழிபெயர்ப்புக்களைச் செய்யும் திறம் குன்றினர் பண்டிதமணியின் மொழிபெயர்ப்புக்கள் முதனூலினும் சிறந்த சொன்னலமும் பொருள்வனப்பும்கொண்டு சிறப்புற்றன. சுக்கிரநீதி, மிருச்சகடிகம் (மண்ணியல் சிறு தேர்) என்ற இரண்டன்மொழிபெயர்ப்புக்கள் அச்சாகி வெளிவந்துள்ளன.

இந்நிலையில் மேலைச்சிவபுரியில் சன்மார்க்க சங்கத்தைத் நிறுவி ஆண்டுதோறும் விழாக்கள் நடத்துவதுடன், பல மாணவர்களை மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நிறுவி நடத்திய தேர்வுகளுக்கு அனுப்பும் முறையில் கல்லூரிநிறுவி இடையறவின்றி நடைபெறச் செய்தது பண்டிதமணியின் கல்விப்பணியாகும். சன்மார்க்க சங்க நிகழ்ச்சிகளில் தமிழகத்தில் சிறந்து விளங்கிய தமிழ்ச்சான்றோர் பலரும் கலந்து இன்புறுவது வழக்கம். இப் புலவர்பெருமக்கள் பண்டிதமணியவர்களின் புலமை நலத்தை வியந்து தம்மிற்கலந்து நல்கிய சிறப்புத்தான "பண்டிதமணி" யென்னும் பட்டம்

பண்டிதமணி யவர்களின் பெரும் புலமைநலத்தை நேரிற் கண்டு வியந்து பாராட்டி இன்புற்ற தஞ்சைக் கரந்தைத்தமிழ்ச் சங்கத் தலைவர் த. வே. உமாமகேசுவரன்பிள்ளை அவர்கள் வாயிலாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் பண்டிதமணி யவர்களின் புலமைச் சிறப்புணர்ந்து பல்கலைக்கழகத்திற் பேராசிரியராகக்கொண்டு பெருமையெய்தினர். அக்காலத்தே அவரது புலமை விளக்கத்தை யறிந்து இந்திய அரசியலார் அவர்க்கு மகாமகோபாத்தியாயர் என்ற சிறப்புப் பெயர் தந்தனர்.

பண்டிதமணி யவர்கள் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" முற்றும் சுற்றி ஆங்காங்குள்ள தமிழறிஞர் கூட்டத்தில் இனிய சொற்பொழிவாற்றி இன்பஞ் செய்தவராவர். அவருடைய சொற்பொழிவு எளியநடையில் அரிய கருத்துக்களை இலேசாக உரைக்கும் இயல்பினதாகும். எல்லோரும் நன்கு தெரிந்த பாட்டேயாயினும், அது பண்டிதமணியவர்களின் சொற்பொழிவில் அகப்படின், அவர் அனைவரும் அதுகாறும் கேட்டிராத நயங்கள் பல உட்கொண்டிருப்பது வெளிப்பட்டுக் கேட்டார் உள்ளத்தைப் பிணித்து இன்பம் செய்யும். பெரிய புராணம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் என்ற தொடர்நிலைச் செய்யுட்கள் வரலாறு கலந்தவையாகலின், இயல்பாகவே இனிமையுறச் சொல்லாடும் பண்டிதமணியால் அவை பெரிய அறிவின்பநிலையமாய்க் காட்சியளிப்பது ஒரு புறம் இருக்க, இறையன்பில் பேரீடுபாடுகொண்ட திருவாசகப் பாட்டுக்கள் வந்துவிடின், பண்டிதமணியவர்களின் சொன்னலம் காலமும் கருத்தும் கடந்து இறையின்ப வெள்ளத்தில் ஆழ்த்தி மகிழ்விக்கும் இயல்பிற்றாகும்.

பண்டிதமணியவர்கள் ஒரு கூட்டத்தில் தலைமை தாங்குகின்றார்கள் என்றால், சொற்பொழிவாளர் பலரும் மிக்க விழிப்புடன் தமது பணியை ஆற்ற முற்படுவர். சொற்பொழிவில் பொறுக்குமளவினும் மிக்கஅளவில் குற்றம் நிகழின்,

அவற்றைக் கண்ணோட்டமின்றி எடுத்துக் காட்டுவதில் பண்டித மணியவர்கள் பின்வாங்குவதில்லை. ஒருகால் அதுபற்றி அவரோடு சொல்லாட நேர்ந்தபோது அவர்கள் சொன்ன கருத்து மிக்க வியப்பை அளித்தது. அவர் சொன்னது : "ஒருவன் ஒரு பொருள்பற்றிச் சொற்பொழிவு செய்யவருகின்றான் என்றால், அவனுக்காகப் பலரும் தமது காலத்தை ஒதுக்கிக்கொண்டு வருவர். அக்காலம் அவர்களது வாழ்நாளின் ஒரு கூறு; அது கழிந்தால் மீளப்பெறலாகாதது அதன் அருமையை எண்ணாது, குற்றம் நிறைந்த கருத்துக்களை ஒருவன் சிறிதும் சிந்தனையின்றிச் சொல்லி வீணாக்குவானாயின், அஃது அவனுக்கும் கேட்போர்க்கும் நன்மை விளைவிககாது; அவனை அது செய்யுமாறு நாம் விட்டுவிட்டால் மேன்மேலும் காலக்கேடு செய்யும் குற்றம் பெருகும என்பதுபற்றியே யான் இவவாறு கண்டிக்கும் கடமையை மேற்கொண்டேன" என்று கூறினா.

சென்னையில் நடந்த தமிழ்க்கூட்டம் ஒன்றில் அரசியலில் அமைச்சராம் செல்வாக்குப் பெற்ற ஒருவா தமிழாசிரியர்களைக் குறைகூறுவதில் ஓர் இன்பம் கண்டு, தமிழ்ப்புலவாகளுக்கு, க, கா என்ற இரண்டுக்குமேல் ஒன்றும தெரியாது, க எனபது கடவுள்; கா என்பது காதல் என்றார். எலலோரும் கை கொட்டி அமைச்சரின் அறிவுரையைப் பாராடடினர். அதன் பின் அஙகே சொற்பொழிவாற்றிய பண்டிதமணியவர்கள், "தமிழாசிரியர்களுக்கு க, கா என்ற இரண்டிற்குமேல் ஒன்றும தெரியாது என அமைச்சர் கூறுவது உண்மை; அதற்குமேல் இவர் அறிந்தது என்ன? இவ்வுலகில் கடவுளுக்கும் காதலுக்கும் மேலாக எப்பொருள இருக்கிறது? இந்த வகையில் தமிழ்ப் புலவர்கள் மாத்திரமலல, இங்கிலீஷ் புலவர்களும் அரசியல் நிபுணர்களும் எல்லாரும் ஒன்றுதான். இந்த அறியாதவர் கூட்டததில் அமைச்சர் விலக்கல்ல" என்று கூறினார்கள். எல்லோரும் பண்டிதமணியவர்களின் நுண்மாண் புலமையைப் பாராட்டிப் பரவினா.

திருவாசகத்துக்கு உரைகாண்பது என்பது நெடுங்காலமாகத் தமிழறிஞர்கள் உலகில் பேரச்சத்தை விளைத்துக் கொண்டிருந்தது. பின்னர் அறிஞர் சிலர் தோன்றி உரையெழுதி வெளியிட முற்பட்டனர். அவ்வுரைகளுள் மறைமலையடிகள் முதல் நான்குபகுதிகட்கு எழுதியவுரை கற்றோரிடையே செல்வாக்குப் பெறுவதாயிற்று. ஏனைப் பகுதிகட்கு அவர் உரை வாராதாகவே, திரு. கா. சு. பிள்ளையவர்கள் திருவாசக முழுதிற்கும் உரைகண்டு வெளியிட்டார். அவ்வுரைக்குத் துணையாக அறிஞர் சிலர் உரைவகுத்து அளித்தனர். இந்நிலையில் பண்டித

மணியின் திருவாசகச் சொற்பொழிவுகளின் நயங்கண்டு வியந்த அறிஞர் அவரையே திருவாசகத்துக்கு உரையெழுதுமாறு வேண்டினர். மறைமலையடிகள் எழுதிய பகுதிகட்கு மேலுள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை என்ற மூன்றுக்கும் பண்டிதமணியவர்கள் கதிர்மணிவிளக்கம் என்ற பெயரால் உரைகண்டு வெளியிட்டனர். அடுத்துள்ள திருவம்மானையில் முதல் மூன்று செய்யுட்களுக்கு ஒருவகையாக உரையெழுதி முடித்தற்குள் அவர்கள் இம்மண்ணுலக வாழ்வைத் துறந்து சென்றார்கள். திருவாசகமுழுதுக்கும் உரை நிரம்புதற்குள் பண்டிதமணி மறைந்தது சைவத் தமிழுலகின் தவக்குறையென்று சொல்லவேண்டும்.

தமிழ், நம் தமிழ்நாட்டில் அரசியல் மொழியாதல் வேண்டும்; அரசியல் அவைகளிலும் நீதிமன்றங்களிலும் தமிழ்மொழியே இடம்பெறல் வேண்டும். உயர்கலைகள் பலவும் தமிழிலே கற்பிக்கவும் எழுதவும்பட வேண்டும் என்பன போன்ற கருத்துக்களை நம் பண்டிதமணியவர்கள் அடிக்கடி கூறிவந்தனர். அவரது பெரும் பிரிவால் தமிழ்நாடு சால்புடைய தமிழ்ச்சான்றோரை இழந்தது, தமிழ்மக்கள் சிறந்த பேராசிரியரை இழந்தனர்; தமிழ்மொழி பிறமொழிநலங்களைத் தமிழாக்கி அணிசெய்யும் தமிழ்ப்பெரும்புலவரை இழந்தது; தமிழ்ச்சமயமாகிய சைவம், எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்துக்குப் பெருமைசான்ற உரைகூறும் பெருமகனை இழந்தது இன்று தமிழ் உலகம்!

---

# பண்டிதமணியின் உயர்வு

[டாக்டர், திரு. மு. வரதராசனார்.]

பண்டிதமணி அவர்களின் சொற்பொழிவுகள் இருமொழிப் புலமை மிளிர்ந்த அரிய சொல்விருந்துகள். அவரது எளிய தமிழ்நடையில் ஆழம் மிக்கிருந்தது. மிகநுட்பமான சமயக் கருத்துக்களையும் சங்க இலக்கியக் கருத்துக்களையும் விளக்கி அவர் ஆற்றிய தமிழ்த்தொண்டு என்றும் போற்றத்தக்கது. பல்கலைக் கழகங்களின் பாடக் குழுக்களுக்குத் தலைமைதாங்கி நடைமுறைகளைப் போற்றிக் காத்த அவர்தம் திறமை வியந்து பாராட்டற் குரியதாக விளங்கியது.

திருவாசகவிரிவுரை பெற்றுத் தமிழகம் மகிழும் என எதிர்பார்த்து ஏமாந்தோம். பெற்றுள்ளவரையில் அவர்தம் அரிய உரை தமிழன்னைக்கு அணி செய்வதாகும்.

# என் உள்ளங்கவர்ந்த ஆசிரியர்

[டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.]

என் ஆசிரியர் பண்டிதமணி அவர்கள் மறைந்தமை கேட்டுத் திடுக்கிட்டுப்போனேன். அவர்கள் சில தினங்களாக உடனலங் குன்றியிருந்ததை அறிந்தேன். ஆயினும், முடிவு இத்துணை விரைவில் வரும் என எதிர்பார்த்தேனல்லேன்.

அவர்களிடம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஏறத்தாழ இரண்டாண்டுகள் கல்விகற்கும் பேறுபெற்ற சிலருள் யானும் ஒருவன். 1934-1935 ஆண்டுகளில் நான் எம். ஏ. வகுப்பிற் படித்து வருங்கால் அவர்களிடம் சிலப்பதிகாரம் (வஞ்சிக் காண்டம்), அகநானூறு ஆகிய உயர்ந்த இலக்கியங்களைப் பாடம் கேட்கும் வாய்ப்புப்பெற்றேன். அவர்கள் நடத்திய ஒவ்வொரு வகுப்பினையும் இன்று நினைத்தாலும், உள்ளத்தில் உவகையும் எழுச்சியும் உண்டாகின்றன. உரையில்லாப் பகுதியாகிய வஞ்சிக்காண்டத்திற்குத் தம்முடைய கூரிய மதியினால் அவர்கள் இழைத்திழைத்துப் பொருள்கூறின திறத்தை யாங்கள் வியந்தோம். ஒப்புமைப்பகுதிகள் காட்டல், மேற்கோள் காட்டல், இலக்கணநயம் எடுத்துரைத்தல், நூனயம் நவிலுதல் ஆகியவகையில் தம்மை ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனச் சொல்லுமாறு அவர்களுடைய வகுப்புகள் நடைபெறும்.

கவிநயம் துய்த்துத் தாமும் மகிழ்ந்து உலகினரையும் மகிழ்விக்கும் அப் பெரியாருடைய பெற்றியை 1930-ல் தானே அறியும் பேறுபெற்றேன். 1930-ல் நான் சென்னை அரசாங்க முகமதியர் கல்லூரியில் தமிழாசிரியனாய் இருந்தகாலத்தில், பண்டித மணியவர்கள் சென்னையில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாசமாஜ மாநாட்டில் தலைமைதாங்கிச் சொற்பொழிவாற்றிய பொழுதும், அடுத்து இராயப்பேட்டை பால சுப்ரமணிய பக்த ஜன சபையில் தொடர்ந்து சில நாட்கள் இலக்கியச் சொற்பொழிவாற்றியபொழுதும் சென்னைமக்கள் திரளாகக் கூடிக்கேட்டு இன்புற்றனர்.

திருவாசகத்தில் பலருக்கு விருப்பம் ஊட்டியவர்களில் பண்டிதமணியே தலைசிறந்தவர்கள். சைவசித்தாந்தக் கருத்துக்களுக்கு ஏற்பவும், இலக்கண முடிபுகளுக்கு இயையவும் இடர்ப்பாடின்றிப் பொருள் சொல்லும் அவர்களது மாண்பு தமிழ் நாட்டிற்குப் பெரிதும் பயன்பட்டது. "கதிர்மணி விளக்கம்," "நீத்தல் விண்ணப்ப உரை," "திருவெம்பாவை உரை" ஆகியவை அவர்களால் தமிழணங்கிற்கு ஏற்றப்பட்ட விளக்குகள். அவை என்றும் பொன்றாது நின்று நிலவும்.

"மண்ணியல் சிறு தேர்" என்னும் நாடக வாயிலாகவும் "சுக்கிர நீதி," "கௌடிலியர் அர்த்த சாஸ்திரம்" ஆகிய அற நூல் மொழிபெயர்ப்பு வாயிலாகவும் தமிழ்த்தாய்க்கு அவர்கள் அணிந்த அணிகலன்களும் உள. மண்ணியல் சிறுதேர் என்னும் "மிருச்ச கடிகம்" வடமொழி நாடகத்தின் மொழிபெயர்ப்பே ஆயினும், பலவகைகளில் முதனூலே எனச் சொல்லத்தக்க அளவு சிறப்புடையது. நல்ல மொழிபெயர்ப்பாசிரியர் கையால் மொழிபெயர்ப்பு நூலும் முதனூலேபோலப் பொலிவுபெறும் என்ற உண்மை இதனால் விளங்குகிறது. பண்டிதமணியின் செய்யுளியற்றுந் திறனுக்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டு. சுக்கிரநீதி, கௌடிலியம் என்பன தமிழற நூலாகிய திருக்குறளோடு ஒப்பிட்டுப்பார்த்துத் திருக்குறளின் மேன்மையை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் பயன்படும்.

பண்டிதமணியவர்கள் அன்பு வலையாற் பிணிக்கப்பட்டவர்; அறிவொளியினால் திகழ்ந்தவர்; நிகரில்லாக் கவிஞர்; தலைமைசான்ற பேராசிரியர், அருள் பழுத்த உள்ளத்தார்.

அன்னாரை இழந்த தமிழுலகு பெரிதும் வறிதாயிற்று.

---

# மாண்ட மாணிக்கம்

[திரு. கா. இரா. நீலகண்டன்.]

இந்நானிலம், நேற்று வாழ்ந்தார் இன்று இல்லை எனக்கூறும் நிலையாமையைத் தன் பெருமைப் பேரணியாகப் பூண்டுளது. நாடோறும் எண்ணிறந்த உயிர்கள் இவ்வுலகத்து உயிர்நீக்கமாகின்றன. அங்ஙனமே மக்களுள் பல்லாயிரவர் தம் அரும் ஆவியை இழந்து விடுகின்றனர். ஆயின் யாம் அந்த அத்துணை மாந்தர்க்காகவும் வருத்தமோ, அவர்களைப்பற்றிய சிந்தனையோ கொள்கின்றோமில்லை. ஆயினும் மாண்ட சில சான்றோர்களையும், தொண்டர்களையும் சிந்தித்தும் மனங்கலங்கியும் வாழ்கின்றோம். அங்ஙனம் ஓர் தமிழ்ப்பெருந் தொண்டரும், வடமொழி வல்லுநரும் ஆய பண்டிதமணி அவர்கள் விண்ணுலகெய்திய செய்தி தமிழர் அனைவர்க்கும் வருத்தம் ஊட்டும் என்பதில் ஐயமில்லை.

பண்டித மணி என்றதும் அவர் வடமொழியினின்றும் மொழிபெயர்த்த எத்துணை எத்துணையோ நூல்கள் நம் நினைவிற்கு வரத்தான் செய்கின்றன. வடமொழியும், தமிழும் ஒருங்கு கற்ற நம்தமிழ்த் தாயின் தவப் புதல்வர் மு. கதிரேசன் செட்டியார் அவர்களை இழந்தது தமிழ்நாட்டிற்கு ஈடு செய்ய முடியா இழப்பாகும்.

---

# பண்டிதமணியின் சிறப்பு

[பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்.]

மகாமகோபாத்தியாய, முதுபெரும் புலவர், சைவசித்தாந்த வித்தகர், பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் இறையடிநீழல் எய்தியது தமிழ்மக்களுக்கு ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும், பண்டிதமணி அவர்கள், தலைசிறந்த தமிழ்ப்புலவர். வடமொழி வல்லுநர். சுவைமிகுந்த சொற்பொழிவாளர், இனிய எழுத்தாளர் பெரிய கவிஞர். உயர்ந்த உரையாசிரியர். சிறந்த பேராசிரியர். செவ்விய மொழிபெயர்ப்பாளர். இத்தகைய புலமைக்கூறுகள் அனைத்தும் ஒருங்கே உடையவர்களைக் காணுதல் அரிது. இவ்வனைத்தும் ஒருங்கமையப்பெற்ற பெருமை பண்டிதமணி அவர்களுக்கு உண்டு. இவர்கள் பததாண்டுகள் அண்ணாமலைப் பலகலைக் கழகத்தில் ஆற்றிய தொண்டுகள் மிகவும் பாராட்டுதற்குரியன. சென்னை, மைசூர், திருவநந்தபுரம் பல்கலைக்கழகங்களும் இவர்களை இயலுமளவு பயன்படுத்திக்கொண்டன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவிய பெருங்கொடைவள்ளல் காலஞ்சென்ற டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், அண்ணாமலைப் பலகலைக்கழகத்தில், தமிழ்விரிவுரையாளராகவும், தமிழ்பபேராசிரியராகவும், தமிழ்ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும் பண்டிதமணி அவர்களைப் பணியாற்றச்செய்து, அவர்களின் புலமையைப் பலருக்கும் பயன்படுத்தியதோடு, பண்டிதமணி அவர்களின்புகழ் உச்சநிலை அடைவதற்குஞ் சிறந்த காரணமாயிருந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

பண்டிதமணி அவர்கள் எழுதிய நூல்கள் சிலவே எனினும் அவையெல்லாம் திட்ப நுட்பஞ் செறிந்தன. தெளிவும வரையறையும் உடையன எச்செயலையும் எண்ணித துணிநது செம்மையாக நிறைவேற்றும் இயல்பு பண்டிதமணி அவர்கள் பால் நன்கமைநதிருநதது. இவர்கள் ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்த இறுதிக் காலத்தில் எழுதிய திருவாசகவுரை இவர்களின் ஆழ்நதகன்ற நுண்ணறிவுக்குத் தலைசிறந்த எடுததுக் காட்டாகும். இவர்களின் பிரிவை எண்ணும்போதெல்லாம் திருவாசகவுரை முற்ற முடியும்வரையேனும இவர்கள் வாழும் பேற்றை நாம் பெறவில்லையே என்னுந் துன்பம் வளாகின்றது.

இறுதிக்காலம்வரை தமிழ்த்தொண்டு செய்த பண்டிதமணி அவர்களை நாம் ஒருநாளும மறக்கமுடியாது. அந் நினைவுக்கு அறிகுறியாக அவர்கள் பெயரால், நிலையாயதொரு பணிசெய்தல் நம கடமையாகும்.

# பெரும் பேராசிரியர்

[வித்துவான், திரு. மு. அருணாசலம்பிள்ளை.]

பெரும் பேராசிரியர் முதுபெரும் புலவர் சித்தாந்த வித்தகர் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் 1881-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்களிற் பிறந்தார்கள். 24-10-53-ல் சிவபரம்பொருளின் திருவடி நீழல் எய்தினார்கள். இவர்களது பெரும் பிரிவு, தமிழ்நாட்டிற்கும் சைவவுலகிற்கும் ஈடுசெய்ய முடியாததோர் பேரிழப்பாகும். இவர்கள் தென்றமிழ் வடமொழி என்னும் இருபெரு மொழிகளிலும் சிறந்த புலமையாளர் என்பதை அறிஞர் உலகம் நன்கறியும். இயற்கையின் அமைந்த நுண்ணறிவும் இடையறா முயற்சியும் தளராத ஊக்கமுமே இவர்களை மேன்மேல் உயரச்செய்தன. அமெரிக்க நாட்டிலிருந்து வெளிவரும் கல்விக்களஞ்சியத்தில் இவர்களது வாழ்க்கை வரலாற்றுக்குறிப்புக்கள் பொறிக்கப்படுகின்றன என்பது அறிந்து பாராட்டுதற்குரியது.

இவர்கள் உயர்ந்த குறிக்கோளும் நிறைந்த பண்பாடும் பரந்த உலகியலறிவும் தெளிந்த சிந்தனையும் உடையவர்கள். நூலாராய்தல், உரைநடை எழுதுதல், செய்யுளியற்றல், சொற்பொழிவுசெய்தல், பாடங் கற்பித்தல், சொற்பொருள் நயங்கூறல், மொழிபெயர்த்தல் முதலான புலமைநலங்கள் பலவும் நிரம்பப்பெற்றவர்கள். இவர்கள் யாண்டிருப்பினும் ஆண்டெல்லாம் ஆசிரியர்களும் மாணவர்களும் பிற அறிஞர்களும் சூழ்ந்திருப்பர். அறிவுச் செல்வத்தை நாடி வருவோர் யாவராயினும் அவரவர் நிலைமைக்கேற்ப அறிவுவிருந்து நல்குவதில் சிறிதும் இவர்கள் பின்னடைந்ததில்லை. அறிஞர்களோடு அளவளாவி மகிழ்தலில் இவர்களுக்கு அளவுகடந்த ஆர்வம் உண்டு. ஒருவரும் இல்லாதபோது வறிதே சோம்பியிருந்தது கிடையாது. அப்போது இளங்கோவடிகள், திருவள்ளுவர், திருத்தக்கதேவர், சேக்கிழார், கம்பர் இன்னோரன்ன பெருமக்களோடு உரையாடிக் கொண்டிருப்பார்கள். அஃதாவது நல்ல நூல்களைப் படித்துக் கொண்டிருப்பார்கள் என்பதே.

இப் பண்டிதமணி அவர்கள் நல்லுயிர் இனிப் பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்பு உண்டேல், திருவாசகத்தின் எஞ்சிய பகுதிகளுக்கும் இவ்வாறு பேருரை எழுதுதற்கே அதனைப் பிறப்பித்தருளுதல்வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

# செழுங்கலை விநோதர்

[திரு. பூ. சமரபுரி முதலியார்.]

தமிழ்த்தாயே! இஃது என்ன தீவினை!

17-9-53-ல் ஒரு தமிழ்மகனை இழந்தாய்! 24-10-53-ல் மற்றொரு தமிழ்ப்பேராசிரியனை இழந்தாய்!

ஒரு இழப்பையே ஈடுசெய்யமுடியாது ஏங்கிக்கொண்டிருக்கும் எங்கட்கு மற்றொரு ஈடுசெய்யமுடியா இழப்பு நேர்ந்ததே!

செழுங்கலை விநோதராய்த் திகழ்ந்த பண்டிதமணி அவர்கள் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் சிறந்த புலமை வாய்க்கப்பெற்று, தம் பேச்சாலும் எழுத்தாலும் ஆசிரியத் தன்மையாலும் தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் செய்த அரும் பணிகள் மிகப் பல. அவையிற்றின் பயனாகத் தமிழர்களுள்ளே முதன்முதலாக "மகாமகோபாத்தியாய" என்னும் சிறப்புப் பெற்றுத் தமிழரும் எவ்வகையானும் மேம்பாடுடையவர்களே என்பதை நிறுத்திய பெருமை அவர்கட்குரியது.

தமிழ்இலக்கியங்களிலுள்ள—சைவநூல்களிலுள்ள—நுண்பொருள்களைப் பாலிலிருந்து வெண்ணெய் எடுத்துக்கொடுப்பதுபோல், சுவைபட அவர் தம் பேச்சிலும் எழுத்திலும் திறம்படக் குறிப்பதைக் காணலாம்.

திருவாசகத்து, திருச்சதகம் முதலிய பகுதிகட்கு எழுதியுள்ள உரையில்அமைந்துகிடக்கும் இலக்கிய நுட்பங்களை, நயங்களை, இலக்கண அமைதிகளை நோக்கும்போது, அவரைப் பேராசிரியர் என்பேமா, சேனாவரையர் என்பேமா, பரிமேலழகர் என்பேமா? சைவசித்தாந்த நுண்கருத்துக்களைக் கருதும்போது சிவஞானமுனிவர் என்பேமா?

"நோக்கிற்கு நக்கீரதேவர், நயத்துக்குச் சுந்தரனார்" என்றார் முன்னே. இற்றைநாள் அவ் இரண்டிற்கும் பண்டிதமணி ஒருவரே திகழ்ந்தாரே!

தமிழ்அன்னையே! இவர்க்கு ஈடாக யாரைக் கொடுக்கப் போகின்றாய்? தமிழர்களாகிய — சைவர்களாகிய — யாங்கள் இனி என்னசெய்யவல்லேம்!

---

# பண்டிதமணி பண்பு

[பேராசிரியர், திரு. கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல்.]

“பண்டிதமணி வருகிறாராம், செந்தமிழிலும் வடமொழியிலும் நல்ல புலமை உடையவராம்; பொருட்சுவை சொற்சுவை தோய்ந்த உரைமழை பொழிவாராம்........” இவ்வாறு இருபது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் எங்கும் பேசிக்கொண்டார்கள். “எப்பொழுது வருவார்? எங்கே முதலில் பேசுகிறார்?” என்று தமிழன்பர்கள் விசாரிக்கத் தொடங்கினார்கள். யாவருடைய உள்ளத்திலும் நல் எழுச்சியும் பெரு மகிழ்ச்சியுங் காணப்பட்டன.

1933-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் நாள் நடைபெற்ற யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பதினோராவது ஆண்டுவிழாவுக்குப் பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார் தலைமைதாங்கிச் சிறந்தவொரு விரிவுரை ஆற்றினார். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமிருந்து திரண்டு வந்த மக்கள் அவர் வாரி வழங்கிய தமிழ்த் தீம்பாலமுதை உண்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் கேள்விப்பட்டபடி — எதிர்பார்த்தபடி—பண்டிதமணி தமது சொற்பெருக்கால் அவர்களுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிட்டார்.

“இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்”

என்று முன் ஒரு புலவர் பாடினார். பண்டிதமணி அவர்களுடைய சொற்பெருக்கைக் கேட்ட மக்கள் யாவரும் இந்தப் புலவருடைய மனநிலையைத்தான் அடைந்தார்கள் எனலாம்.

“சொல்லுக்குச் சொல்லழகேறிய பேச்சு; மொழிக்கு மொழி தித்திக்கும் வார்த்தைகள்; கேட்டார்ப் பிணிக்கும் நாவன்மை; கேளாரும் விரும்பிய நயங்கள்”....என்று வருணித்தார் அவருடைய சொற்பொழிவைக்கேட்ட என்னுடைய நண்பர் ஒருவர்.

அப்பொழுது என் வயது பத்தொன்பது; அடுத்த மாதம் நடக்கப்போகும் பண்டித பரீட்சைக்குத் தோன்றுதற்குப் படித்துக்கொண்டிருந்தேன். தமிழ்க்கல்வியில் ஈடுபட்ட என் போன்ற இளைஞர்களுடைய உள்ளத்திலே அவருடைய பேச்சு பல உணர்ச்சிகளையும் பதிவுகளையும் உண்டாக்கிற்று. அவருடைய சொல்லாட்சியும், புதுமைமிக்க நயங்களைக் கூறும் மாட்சியும், சிந்தைக்கும் செவிக்கும் இனிமைபயக்கப் பேசும் ஆற்ற-

லும், பன்னூற்பயிற்சியும் நுண்மாணுழைபுலமும், உள்ளத் தொளியைக்காட்டும் புன்முறுவல்பூத்த முகமும் எங்களைக் கவாந்தன. "மூவர்கட்கு அறியான் நிற்ப முத்தமிழ்ச் சங்கத் தெய்வப்பாவலர் வீற்றிருக்கும் பாண்டி நன்னாடு போற்றி" எனும் அடிகளை அன்று எடுத்துக்காட்டிப் பண்டிதமணி அவர் கள் கூறிய நயங்களும், தமிழ்ப்புலவர்களின் பெருமையைப் புலப்படுத்திய அருமையும், இன்றும் என் மனத்தில் நிலைத் துள்ளன.

அவர்களுடைய தமிழமுதை மாந்தியமக்கள் அவரைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சொற்பொழிவாற்றுவித்தனர். கண்ணப்பநாயனாரைப் பற்றிப் பேசியபொழுது,

> "முன்பு திருக்காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்
> இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கைத்
> தன்பரிசும் வினைஇரண்டும் சாருமலம் மூன்றும்அற
> அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ."

என்னும் பெரியபுராணச் செய்யுளுக்கும்,

> "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
> என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட் கொண்டருளி"

என்னும் திருவாசக அடிகளுக்கும் அவர் கூறிய நயங்களைக் கேட்டவர்கள் அவற்றை என்றென்றும் மறவார்கள். இந்த நயப்புரைகள் அவருடைய தமிழ்ப்புலமையை மாத்திரமன்றிச் சைவசித்தாந்தப் புலமையையும் வெளிப்படுத்தின. அவருடைய வருகையால் யாழ்ப்பாணத்தில் புத்துணர்ச்சி ஏற்பட்டது; தமிழார்வம் பெருகியது. தமிழமக்கள் யாவருடைய பாராட்டுக்கும் வியப்புக்கும் அவர் உரியவரானார்.

அவருடைய சொற்பெருக்குகளை பின்னர்த் தமிழகத்திலே பல இடங்களிலே கேட்கும்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவற்றுள் இரண்டு இடங்களிலே அவர் நிகழ்த்திய பேருரைகள் இன்றும் என்னுள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

1938-ம் ஆண்டிலே கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா மிகச்சிறப்பாக நடந்தது. ஞானியார் அடிகள், நாவலர் வேங்கடசாமி நாட்டார், தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை, கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை முதலியவர்களுடன் பண்டிதமணியவர்களும் விரிவுரை ஆற்றினார். இந்த விழாவில் பண்டிதமணி ஆற்றிய விரிவுரை அவருக்கே உரிய தனிப்பண்புகள் பல நிறைந்து விளங்கிற்று. அவருடைய பேச்சிலுள்ள கனிவு, குழைவு, இனிமை, நுட்பம் முதலிய பண்புகள் யாவற்றையும் ஒன்றுசேரப் பிறர் பேச்சிலே காணுதல் அரிது.

1940 இல் சென்னைமாநகரில் நடந்த குறுந்தொகை மாநாட்டில் அவர் நிகழ்த்திய தலைமையுரையும் தனிச்சிறப்பு வாய்ந்தது

"தாமரை புரையும காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின்றா லுலகே"

எனும் குறுந்தொகைக் கடவுள்வாழ்த்துச் செய்யுளிலுள்ள நுண்பொருள்களை விளக்கி யாவரையும இன்பக்கடலில் திளைக்கச் செய்தார்.

"எழுத்தின் திறனும் இன்சொற்பொருளின் அழுத்தமும் நன்கறிந்து அழகுறத் தொடுத்து உரைக்கும் ஆற்றல் அவருக்கு இயல்பாகவே அமைந்துளது.

அவர்களின் உரைவிருந்தைக் கொழும்புமாநகரிலுள்ள மக்கள்பலர் மீண்டும் நுகர்ந்து இன்புற விரும்பினர். இலங்கைக்கு இன்னும ஒரு முறை வந்து கொழும்புத் தமிழ்ச்சங்கச் சார்பில விரிவுரைகள் நிகழ்த்துமாறு 1949-இல் எழுதிக் கேட்டேன். இதற்கு அவர்கள் "என் உடல்நிலை தளர்ச்சியடைந்துளது. அதனால் சிலகாலமாக வெளியூர்ப பிரயாணஞ்செய்ய இயலாத நிலையிலிருக்கிறேன் சிலோன் வருவதற்கும் பழைய புதிய நண்பர்களைக் கண்டு அளவளாவி இன்புறுதற்கும் விருப்பம் மிகுதியாக இருந்தும் இத்தடையால் இயலாமையுடையவனாக இருக்கின்றேன், பொறுக்கவேண்டும்" என்று எழுதினார்கள். இக்கடிதத்தின் இறுதியில் "தங்களனைய அறிவுடைய நண்பர்களின் அன்புடைமையே எஞ்சிநிற்கும் வாழ்நாளை இனிது நடத்துமென்னும் துணிவுடையேன்," என்று அவர்கள் குறிப்பிட்டார்கள.

இஃது அவர்களுடைய உள்ளத்துயர்வையும் தமிழறிஞர்களிடத்து அவருக்கிருந்த அன்பையும் நன்கு காட்டத்தக்கது.

அவர்களுடன் பழகியவர்கள் அவருடைய இனிய பண்புகளை நன்கறிவர்; நகைச்சுவை ததும்ப உரையாடி அன்பர்களை மகிழ்விப்பதில் அவருக்கு அவரே நிகரானவர். சொற்பெருக்காற்றும்பொழுது மாத்திரமன்றி உரையாடும்பொழுதும் அவர் செய்யுணயங்களை எடுத்துக் காட்டிக் கேட்போரை இன்பமடையச் செய்வார்.

அவருடைய வடமொழிப்புலமை தமிழினை வளம்படுத்திற்று. "மண்ணியற்சிறுதேர்" இதற்கோர் எடுததுககாட்டாகும. தம முடைய வடமொழிபபுலமையைக் காட்டுதற்குத தம் நூலக ளிலே அளவுக்குமிஞ்சி வடசொற்களை எடுததாணட ஆசிரியா கள் சிலரைப்போன்றவர் அலலா அவா அவருடைய நூல்கள் அவருடைய பெரும புலமையை மாத்திரமன்றி அவருடைய அளவிறந்த தமிழ்ப்பற்றையும் தமிழசசொறகள இருககும போது வடமொழிசசொறகளை வழஙகவேண்டியதில்லை எனும சீரிய கொள்கையையும் நன்கு காட்டுகின்றன

"பழமை வேண்டாம் பழைய காவியங்களைக் கண்ணெடுத் தும் பார்க்காதீர்கள்; புதுமை, மறுமலாச்சி எழுச்சி எனும போர்வைகளை அணிநது தப்பிக்கொளளுஙகள, பேசுகிறமாதிரி எழுதுங்கள், விருமபியபடி பாடுஙகள," எனறெலலாம ஆர வாரித்துத் தமிழைக் கொலைசெய்யும சோமபேறிகள் சிலா தமி ழறிஞர்கள என்று உலாவும் இந்தக்காலததில் பழமைக்கும் புதுமைக்கும பாலமிட்டுத தமிழ்மரபு வழுவாது பாடியும் எழுதி யும் பேசியும் கற்பித்தும்வந்த முதுபெரும்புலவர் பண்டிதமணி பேரா இயறகைப் பெரும்பேறெய்தியமை தமிழகததிறகு ஈடுசெயய முடியாத ஒரு பேரிழப்பேயாகும்

தம் உடல்நலத்தையும பேணுது திருவாசகத்துக்கு அவர் எழுதிவநத பேருரை, இன்னும் முடிநதிலது ஆனால அவரோ போய்விட்டார் என்பதை எணணும்பொழுது அவருடைய பிரிவு மேலுந் தாங்கொணுததாகின்றதன்றே!

"பண்டிதமணி"—இந்தப் பட்டம தமிழகம் முழுவதிலும் கதிரேசச்செட்டியாரையே குறிககும நாவலரைபபோலப் பண்டிதமணியும் தாமபெற்ற பட்டததுக்கு மதிப்பளித்தவர்; பட்டப்பெயரையே தம் பெயராக்கிக்கொணட பெருமையாளா. இவர்தம் பூதவுடல் மறைநதுவிட்டதெனினும் இவருடைய புக ழுடல் தமிழகத்தின் பண்டிதமணியாக என்றென்றும் நிலைதது நிற்கும. இவருடைய இன்னுயிர் இறைவன் திருவருளிற்றிளைக்குக.

# பண்டிதமணியா? இரசிகமணியா?

[திரு சாமி. வேலாயுதம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.]

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் தம் காலத்து விளங்கிய தமிழ்ப்புலவர் யாவருள்ளும் மணியாய் விளங்கி வந்தது மெய்தான்; ஆனால் அது அவரது புலமையினால்[1] (பாண்டித்தியத்தினால்) மட்டும் அல்ல, அதனினும் உயர்ந்த அவரது அருஞ்சுவைத் திறத்தினாலேயே ஆகும். பெரும் இலக்கியங்களைப்பற்றி அருநயப்பட, பெருங் கூட்டங்களில் அன்றிச் சிறு சந்திப்புக்களிலும் அவர்போல் பேசி விளக்கியவர் வேறில்லை. இலக்கியச்சுவை இன்னதென அறியாதாரிடத்தும் அவர் அச்சுவையை எழுப்பிவந்ததால் அவருக்குத் தமிழ்ச்சுவைமணி எனும் பட்டமே ஏற்புடையது என்பதில் ஐயமில்லை

சுவைமணிகள் (இரசிகர்கள்) பலருளர்; அவர்களைப் பின்பற்றிப் போற்றுவோரும் மிகப்பலர் உளர். ஆனால் அவர்கள் யாவரும் விருப்பு வெறுப்புக்கு ஆளானவர்கள், சுவைகாணக் கூடியவற்றையும் சுவையற்றதென ஒதுக்கும் திறம் படைத்தவர்கள்; ஏதேனும் ஓர் பேரிலக்கியம், சில சிற்றிலக்கியங்களில் தான் அவர்கள் மேற்போக்கான சுவைகாண வல்லவர்கள்; அவற்றிலும் அவர்கள் காண்கிற, காட்டுகிற சுவை ஏனையோருக்குச் சிலவேளை விளங்காததாயும் இருக்கும்; முடிவாக அவர்களைப்பற்றிய யாவும் ஒரு தனிப்போக்காகவே தெவிட்டும். ஆனால், நம் பண்டிதமணியின் சுவையோ மிகப் பரந்ததன்றி ஆழமானது, இயற்கையானதுடன் எளிதானது; யாவருக்கும், எப்பொழுதும் இனிதானது. இதனால் அவர் பேச்சு எங்கும் வீணானதே கிடையாது; வாய்க்காது போனதுமில்லை. அவரது அருள்நோக்கு (Sympathy) எதிரிகளையும் வயப்படுத்தி வந்ததைப் பன்முறை பார்த்திருக்கிறோம்; யானறிந்தவற்றுள் இரண்டாவன:—

ஓர் சீர்திருத்தக்காரர், நம் செழுங்கலைச் செல்வரின் சீரிய தலைமையில், பல பழக்க வழக்கங்களைச் சினவெறியுடன் தாக்கிப்பேசிப் பரபரப்பை உண்டாக்கி வருகையில், பெண்மக்களைப் பார்த்துக் கணவர்களின் மிச்சில் மிசைவதனை இழித்துப்பேசி, அத்தீய பழக்கத்தை அன்றுமுதல் ஒழித்துக்கட்ட வேண்டு

---

1. பொதுப்பட நோக்கின் திரு. உ. வே. சாமிநாதையர், ரா. இராகவையங்கார், மறைமலையடிகள், வேங்கடசாமி நாட்டார் முதலியோர் ஒத்த தமிழ்ப்புலமை உடையவர்களேயாகும்; அவர் போக்கும், உழைப்புந்தான் வெவ்வேறாகும்.

மென வேண்டிக்கொண்டனர். முடிவில் பண்டிதமணி, தம் இயற்கைப் புன்முறுவலுடன் எழுந்து, அப் பெண்மணிகளையே நோக்கி, அவ்வின் பழக்கத்தை விட்டுவிடுவதுமட்டும் போதாது என்றும், எத்தனை ஆண்டுகளாக அவ்வாறு உண்டுவந்தனரோ, அத்துணை காலமாவது தங்கள் மிச்சிலையும், தங்கள் கணவரையே உண்ணச்செய்து, பழிக்குப்பழி வாங்கினால்தான் தமக்கு ஆறுதல் உண்டு என்றும் தெரிவித்துக்கொண்டனர். இம் மறுமாற்றம் அச் சீர்திருத்தக்காரர்முதல் யாவருக்கும் எத்துணை நயப்பாட்டை விளைத்திருக்கும் என்பதைக் கூற வேண்டியதில்லை.[1]

கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடாகிய தமிழ்ப்பொழிலில் மூவர் தமிழ் எனும் ஆராய்ச்சிக் கட்டுரையின் முற்பகுதி வெளிவரக் கொடுபட்டிருந்தது; அதில் திருவாசகத்தினும் தேவாரமே சில வகைகளிலாவது சிறப்புடையது என நிறுவப்பெற்றிருந்தது. அதனை விரும்பாத அப் பொழில் தலைவர், பண்டிதமணிக்கு அதன் ஆசிரியரை அறிமுகப்படுத்துங்கால், "இவர் தான் திருவாசகம் தேவாரத்தினும் தாழ்ந்தது எனுங் கொள்கையுடையவர்" எனக் குறைபடக்கூறி, அவர் ஆதரவையும் நாடினர். ஆனால் பண்டிதமணியோ அக் கொள்கையிற் பற்றற்றவரேனும், "ஏன், உலகமே தேவார திருவாசகம் என்று தானே முறைப்படுத்தி முழங்குகிறது, அதிலென்ன தவறு!" என உடன் கூறியது அவரது நயத்தக்க நாகரிகப்பண்பை நிலைநாட்டியதாகும்.

பத்திச் சுவை—நனிசொட்டச் சொட்டப் பாடப்பெற்றுள்ள திருவாசகத்திலேயே அவர் கண்டுள்ள நயங்கள் வேறெந் நூலுக்கும் எவரும் முறைபடக் கண்டிலா என்பதிலும், இந் நூலே அவர் நூல்களுள் தலையாயதன்றித் தமிழ்ப்பேருரை நூல்களாய இளம்பூரணம், நச்சினார்க்கினியம், பேராசிரியம், அடியார்க்கு நல்லம் முதலியவற்றுடன் வைத்தெண்ணவேண்டிய பெருமை பெற்றுளது என்பதிலும் ஐயமேயில்லை. ஆனால், அந்தோ! அந்நூல் முடியுமுன் அவர் அவ்வுலகு எய்தியது, பொதுவாய்த் தமிழுலகிற்கும் சிறப்பாய்ச் சைவவுலகிற்கும் ஒரு பேரிழப்பாகும்!

---

1 அவர் அப்பொழுதே ஆடவர்களையும் நோக்கி "அன்பர்களே! என்னையும் ஓர் கோடரிக்காம்பாகக் கருதிவிடாதீர்கள்! திருவள்ளுவரும், "பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி வாலெயிறூறிய நீர்" என நமக்கு நற்சுவை காட்டியிருப்பதால், நீங்களும் அவ்வின்பத்தை எளிதில் துய்க்க இது ஒரு நல்வழி ஆகும். எனவே, இவ்வாறு கூறினேன் எனவும் தெளிவித்திருப்பின், இன்னும் பெரு ஆரவாரம் உண்டாயிருப்பது திண்ணமாகும்.

அவர் இந்நூலைத் தொடங்கிய வகையும் குறிப்பிடத்தக்க தாகும். 18—7—43-ல் கரநதைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழா வில், அவர் பெரும் பேராசிரியர் (மகாமகோபாத்தியாயர்) பட் டம் பெற்றதற்காகப பாராட்டப்பெற்றனர்; மறுநாள் பாவ நாசம் உயர்பள்ளி மாணவர் சங்கத தொடக்கவிழாப் பேருரை யாகக் கவியின்பம் எனும் பொருள்பற்றிய பேசி இளஞ்சிறார் களையும் களியாட்டயரச் செய்தனர். அவருக்கு நன்றி கூறுங் கால், "அவர் பேசுவது, பெயரளவில் பலப்பல தலைப்பின்கீழ் ஆயினும, பொருள் அளவில் கவியினபம் ஒன்றேதான் எனப் போற்றபபெற்றது அவரை இறும்பூதடையச செய்தது. அந் நிலையை நழுவவிடாது பின் தனிமையில், அவர் செய்துவந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்பபணியாகிய சாணககிய தந்திரததின மொழிபெயாப்பு, வேறு எவரும் செய்யக்கூடி யதே என்றும், அவரே செயயக்கூடிய திருவாசகப்பணியைத் தான் உலகம் ஆவலுடன் எதிர்நோக்குகிறதென்றும் கூறப்பட் டது. அவா அதனை உடன்ஏற்றுச் செயலாற்றத் தொடங்கிய பெருந்தகைமை பெரிதும் போற்றததக்கதேயாகும். பின்னர் 26—8—43-ல் அண்ணாமலைநகரில், தாம் இருவகையாக நூலியற்றத் தொடங்கிய, பின் சிறந்ததொரு முறையைப் பின் பற்ற இருப்பதைக் காண்பித்தருளினர். ஒருவகை, 20-ககு மேம்பட்ட தலைபபுகளினகீழ்க் கட்டுரைகள் எழுதுவதாகும்; மற்றொன்று, இப்பொழுது வெளிவந்துள்ள கதிர்மணி விளக்கமே யாகும். இவ்விரு வகைகளும் சிறந்தனவே என்பதில் ஐய மில்லை. இவ்விரு கைக் குறிப்புக்களையும் அவர் வைத்துப்போ யுளர். அவற்றை அடிப்படையாககொண்டு பல்கலைக் கழகங் களும், செல்வர்களும், இப்பொழுதுள்ள சிறந்த புலவர்களைக் கொண்டு முடிந்து முடித்தல் அவருக்குத் தமிழுலகு தெரிவிக் கக்கூடிய சிறந்த நன்றியாகும. இன்னும் காளிதாசனின் தலை நூலாகிய சாகுந்தலத்தினும் சிலப்பதிகாரமே மிகச் சிறந்து விளங்குவதை, வேறெவரும் சிந்தியா வகையில், பலப்பல ஒப்பு மைகளுடன் அவர் விளக்கிச், சிறந்ததோர் தொடர் சொற் பொழிவு நிகழ்த்தி நிறுவியது பலர் அறிந்த வொன்றாகும்; யாவரும் அறியவேண்டியதுமாகும். இன்னும் இவ்வாறு எத் துணையோ! இக்குறிப்புக்களையெல்லாம் பெருக்கி வெளியிடல் தலையாய தமிழ்ப்பணி ஆகும் என்பதில் ஐயமும் உண்டேயோ?

# தமிழ்த்தாயின் தவப்புதல்வர்

[திருவாட்டியார், பண்டிதை, எஸ். கிருஷ்ணவேணியம்மாள்.]

தமிழிற்கும் சைவத்திற்கும் சொல்லாலும் எழுத்தாலும் பல அரிய தொண்டுகளைப் புரிந்து, மக்களுக்கு அறிவுச்சுடர் கொளுத்திய மகாமகோபாத்தியாய—பண்டிதமணி—மு. கதிரேசச் செட்டியாரவர்கள் மறைந்தது தமிழ்நாட்டிற்குப் பேரிழப்பேயாகும். டாக்டர்—உ. வே சாமிநாதையருக்குப் பின், முதன்முதலில் மகாமகோபாத்தியாயப் பட்டம் பெற்றவர் இவரே என்னில் இவருடைய கலைத்திறனைக் குறித்துக் கூறவும் வேண்டுமோ!

சிலமுறை இவர் இனிய உரைகளைக் கேட்பதற்கும், இருமுறை இவர் தலைமையில் சொற்பொழிவாற்றுதற்கும் எனக்கு வாய்ப்புக் கிடைததன. அவ்வமயங்களில் இவர் ஆராய்ச்சி உரைகளினால் யான் பெற்ற பயன் பெரிதாகும்.

இப்பெரியார் வடமொழிநூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளமையின், இவர் அம்மொழியிலும் வல்லுநர் என அறிகின்றோம். இத்தகைய கலைஞரை, நன்னீர் சுரக்கும் சுனைகளுக்கும், முத்துக்களையும் மணிகளையும் கொழித்தொதுக்கும அருவிகளுக்கும் ஒப்பிடுதல் மிகையாகாது.

இச்சீரியோர் எத்தனை நாட்களுக்கு உலகில் வாழ்கின்றனரோ, அத்தனை அரும்பெரும் பொருள்கள் வெளிப்போந்து, பலரை அறிஞராகவும், கலைஞராகவும் பத்தராகவும் செய்யும் என்பது உறுதி இதனினும் தமிழ் நாட்டிற்கும் தமிழுக்கும் செய்யும் பேருதவி யாது? இத்தகைய தவப்புதல்வரை இழக்குங்கால், தமிழ்ததாய் வருந்தாமலிருக்க இயலுமா? இயலாதெனபது ஒருதலை. ஆதலின், இச்சான்றோர், இடத்தை நிரப்புதற்குத் தமிழ்த்தாய் சிலரை உருப்படுத்த வேண்டும். இன்றேல், நம்நாடு கலைப் பெருக்கையும், ஞானபபொலிவையும், பத்திப்பண்பையும் இழந்து வாடும் என்பது துணிவு. இதற்கு இறைவன் அருள்புரிவானாக.

இவர் குடும்பத்திற்கு என் இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவர் ஆன்மா இறைவன் அருளடியில் அமர்ந்து அமைதியுறுவதாக.

# அறிவுக் களஞ்சியம்

[திருவாட்டியார், இராசரத்தினம் அம்மையார், எம். ஏ., எல் டி.,]

மகாமகோபாத்தியாய, பண்டிதமணி, கதிரேசன் செட்டியார் அவர்கள் திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் தனவைசியர் மரபில் உதித்தவர் இவர். சீரிய செல்வம் கல்வியே என்னும் கொள்கையை யுடையவர். பெட்டி வண்டியிலும் செல்லமுடியாத, கட்டுப்பெட்டியாம் மகிபாலன் பட்டியில் தோன்றியவர். ஏட்டுப் பள்ளியும் திண்ணைப் பள்ளியுமே மிக்க அக்காலத்திலும், நல்லாசிரியரையடுத்து, வடமொழி, தென்மொழியாகிய இரண்டையும் கற்றவர். வடமொழி இலக்கணத்தைப் பயிலுங்கால் பல அரிய பொருள்கள் அவரே படிக்காமலும், ஆசிரியர் சொல்லாமலும், தெரிந்தன என்று கூறியவர். அரிய செய்யுட்கள் பலவற்றை இயற்றியதோடு, மொழிபெயர்ப்பு நூல்கள் பலவும் இக்காலத்திற்கேற்ற நவீனங்கள் சிலவும் இயற்றியவர். திருவாசகத் தேனின் சுவையை அறிந்த இவர் தம்முடைய ஆழ்ந்த சைவ சித்தாந்த அறிவாலும், வடமொழியின் துணையாலும், நுண்ணிய மதியாலும், மணிவாசகரின் மொழிக்கேற்ற உரையை வகுத்துள்ளார்.

இவர் எக்காலத்திலும், எல்லோரிடத்திலும் இன்முகங் கொண்டு பேசும் இயல்புள்ளவர். இவரிடம் ஒருமணி நேரம் பேசினாலும், பல நூல்களைப்படித்த பயனை யடையலாம். கேட்டாரைப் பிணிக்கும் முறையிலும், படித்தவரைத் தன்னிடம் பற்றுக்கொள்ளச் செய்யும் தன்மையிலும் பழகவல்லவர். இவர், மாணவரைத் தமது குழந்தைகளாகப் பாவித்துப் பரிவு காட்டும் தன்மையர்.

சிவநேயச செல்வராகிய இவர் பல சைவ மாநாடுகளிலும், இலக்கிய மாநாடுகளிலும், தலைமைதாங்கியும், விரிவுரை யாற்றியும் அறிவு கொளுத்தியுள்ளார். பண்டிதரேயன்றிப் பாமரரும் அறியத்தக்க முறையில் பாடஞ் சொல்லவும் சொற்பொழிவாற்றவும் திறமையுள்ளவர். அறிவுக்களஞ்சியமாகிய இவருக்கு அமைந்த வாழ்க்கைத்துணைவியாரும் மாணவரிடம் பெரிதும் அன்புடையவர். தம்பதிகள் இருவரும் வீட்டிற்குச் சென்றவருக்குச் சொல்விருந்தோடு, நல்விருந்தும் அளித்து உவப்பது வழக்கம். இப்படிப்பட்ட விருந்தினரை வானோர் உபசரிக்கக் கருதியே விரைந்து அழைத்துக்கொண்டனர் போலும்! அன்னார் ஆன்மா சாந்தியடைவதாகுக! குடும்பத்தினர் அமைதி யடைக!

# மணியின் மறைவு

[டாக்டர் மா. இராசமாணிக்கனார் எம்.ஏ., எல்.டி., எம்.ஓ.எல்.,பி.எச்.டி.]

மகிபாலன்பட்டி, மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் மறைந்த செய்தி கேட்டுத் தமிழகமே திடுக்குற்றிருக்குமென்பதில் ஐயமில்லை.

இப்பெரியார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் இருந்து தொண்டாற்றியவர். தொல்காப்பியம், பெரியபுராணம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற பெரு நூல்களிலும் சைவத் திருமுறைகளிலும் சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் மிகுந்த புலமையுடையவர். இவருடைய சொற்பொழிவுகளில் சொற்சுவையும் பொருட்சுவையும் சிறந்து காணப்படும். செய்யுள்நயம் காண்பதிலும் அதனைப் பிறருக்கு எடுத்து உரைப்பதிலும் இவர் சிறந்தவர்.

இப்பேராசிரியர் திருவாசகத்திற்கு மிகச் சிறந்த உரையை எழுதி வந்தவர். இவர் இறுதியாக வெளியிட்ட 'திருவெம்பாவை' உரை இவரது பெரும் புலமைத் திறனைக் குன்றின் மீதிட்ட விளக்கென ஒளிரச் செய்வதாகும். திருவாசக நூல் முழுமைக்கும் இவரது உரை வெளிவரும் என்றெண்ணி மகிழ்ந்த தமிழறிஞர் பலராவர். அவரனைவரும் மணியின் மறைவுகேட்டு வருந்துவரென்பதில் ஐயமுண்டோ?

சென்ற திங்களில் தமிழ்ப்பெரியாரான திரு. வி. க. வை இழந்தோம். இற்றைத்திங்களில் நமது மதிப்புக்குரிய மணியை இழந்தோம் இவர்தம் மறைவு நமக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இறுதிவரை தில்லைப்பெருமான் நினைவிலேயே ஈடுபட்டிருந்த இப்பெரியாரது ஆன்மா அப்பெருமான் திருவடி நீழலில் அமைதியுறுக!

சிறந்த பாவலரும் நாவலரும் உரை ஆசிரியரும் ஆராய்ச்சியாளருமாக விளக்கமுற்றிருந்த இப்புலவர் பெருமான் தமிழன்னைக்குச் செய்துள்ள தொண்டினைத் தமிழ்மக்கள் என்றும் எண்ணிப் பாராட்டுவர் என்பதில் ஐயமில்லை.

# பண்டிதமணியின் மேன்மை

[வித்துவான், திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பி எல்.]

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்இலக்கிய வரலாற்றிலே இறவாத புகழிடம் தேடிகொண்டவாகளுள் பண்டிதமணியும் ஒருவர். பொதுமக்களாலும், பலகலைக் கழகங்களாலும், அரசியலாராலும போற்றிப பாராட்டப்பட்டவாகள் பேராசிரியர் பண்டிதமணி முதுபெருமபுலவர் மகாமகோபாத்தியாய மு. கதிரேசச் செட்டியார் அவர்கள். அன்னார் இளம்வயதில் மழைக்குக்கூடப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கி அறியார்களா. ஆனால், தாமாகவே வீட்டில் இருந்துகொண்டு தமிழையும் வடமொழியையும் நன்கு அழுந்தக கறறுப் பெரும்புலமையெய்தினாகள். வடமொழிநூலகளைத் தமிழில் மொழிபெயர்த்தெழுதும் வல்லமை அடைநதார்களா. வடமொழி வேதநூல்களையும் உபநிடதங்களையும் பழுதறப் பயின்று பாண்டித்தியம் பெற்றாகள். சித்தாநத சாததிரங்களைச் சேகறககற்று ஞானத்தெளிவை ஈட்டினாகள் தமிழில் செய்யுள இயற்றும திறமையும் அவர்களுக்குக் கைகூடியது அவர்கள் பல இடங்களுக்கும் சென்று ஆற்றிய சொற்பொழிவுகள சிறநத அறிவுவிருந்தாய்த் தமிழின்பம் கொழித்து விளஙகின

அவாகளுடைய சொலவன்மை, பண்டிதரையும் பாமரரையும் விரும்பிககேட்டுப பெருமபயன் கொள்ளச்செய்தது. அவாகள் பேசசினைக் கேட்டோர் ஒருநாளும அவாகளை மறக்க முடியாது. தூயதமிழில் எளியநடையில் பழம்பாடல்கள பலவற்றினுமுள்ள ஆழ்ந்த கருத்துக்களையும் நயங்களையும், நகைச்சுவை ததும்ப மிக எளிதாய் யாவரும்புரிந்து கொள்ளும் விதததில அவர்கள பேசியும எழுதியும் தமிழ்உலகிற்குப் பேருதவி புரிநதார்கள். சைவசித்தாந்தத்திலுள்ள மிக நுணுககமான கருததுக்கள் பலவற்றையும் மிக எளிதாக்கி யாவருக்கும் விளஙகும்படி செய்வதில் பண்டிதமணி ஈடிணையற்ற பெரியாா.

மேலைச்சிவபுரியில் அவர்கள் அமைத்த சன்மார்க்க சங்கமும் கலைமகளகல்லூரியும என்றும் நின்று நிலவி அவர்கள் பெயரை விளங்கச் செய்யும். அவர்கள் எழுதிய கௌடலீயம் என்ற மொழிபெயர்ப்புநூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இப்பொழுது அச்சாகிக்கொண்டிருக்கிறது. விரைவில் வெளி வரும். இறுதியாக அவர்கள் திருவாசகத்திற்குப் பொருள் எழுதும் அரிய பணியிலே ஈடுபட்டார்கள். திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகியவற்றின் உரைவளமும் வெளிவநது நமமையெல்லாம் மகிழ்வூட்டியது. மேலும்

தொடர்ந்து திருவாசகம் முழுமைக்கும் அவர்கள் தள்ளாத காலத்திலும் தளராது உரையெழுதி முடிக்கவேண்டுமே என்று தமிழுலகம் திருவருளை வேண்டிக்கொண்டு ஆவலுடன் எதிர்பார்த்தது ஆனால் கதிரொளி மறைந்துவிட்டது.

பண்டிதமணியைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு யாதொரு குறையும் இல்லாதபடி எல்லாச் செல்வங்களும் ஏற்றமுறக் குவிந்திருந்தன. செட்டிநாட்டரசர், ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், கலைவள்ளல், கரு. முத்து. தியாகராய செட்டியார் அவர்களும், நற்சாந்துப்பட்டி சிதம்பரம் செட்டியார் அவர்களும், மற்றும் பல செல்வந்தர்களும் பண்டிதமணிக்குப் பலவிதத்தில் பேருதவி செய்துவந்தார்கள். மிக அண்மையில்கூட, ராஜா சர். முத்தையசெட்டியார் அவர்கள் பண்டிதமணியை யாதொரு கவலையுமில்லாமல் கௌரவப் பேராசிரியராய் அண்ணாமலைநகரில் வீற்றிருக்கும்படி பலமுறையும் வேண்டினார்கள் ஆனால், பண்டிதமணியோ இன்று வானாட்டில் வீற்றிருந்து அண்ணாமலையான் அடிக்கமலம் இறைஞ்சுகின்றார்கள் குறைவிலா நிறைவில் பண்டிதமணி உறைவார்களாக!

---

# மறைந்த பண்டிதமணி

[திருமந்திரமணி—துடிசைகிழார். அ சிதம்பரனார்]

மகிபாலன்பட்டி மகாமகோபாத்தியாய—பண்டிதமணி—மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் தம்முடைய 73-வது ஆண்டில் சென்ற 24-10-53ல் இறைவன் திருவடி எய்திய செய்தியைச் செய்தித்தாள் மூலம் அறிந்து மனம் மிகத் துயர் எய்தியது என்னே! திரு. வி. க. அவர்களையும், பண்டிதமணி அவர்களையும் அடுத்தடுத்து இழக்க நேர்ந்தது தமிழ் நாட்டிற்கு ஒரு பெருங்குறையே யாகும்.

சைவசமய வளர்ச்சி கருதித் திருவாசகத்துக்கு உரை வகுப்பான் புகுந்து, மறைமலை அடிகள், முதல் நான்கு அகவற் பாக்களுக்கும் எழுதியிருந்த உரையைத் தொடர்ந்து, திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை முதலிய பதிகங்களுக்கு உரை எழுதி முடித்து வெளியிட்டது உலகம் அறிந்ததே. இனி, எஞ்சியுள்ள 44 பதிகங்களுக்கும் உரை எழுதி முடிப்பதற்குள் அவர் பிரிந்தது தமிழ்நாடு செய்த தவக் குறையே யாகும். இவருடைய ஆன்மா சாந்தி உறுவதாக.

# பேருரையாளர்

[திரு. ச. சோமசுந்தரபாரதியார், எம்.ஏ., பி.எல்.]

சமீபத்தில் காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் இருமொழிப் பெரும் புலவர். தென்தமிழ், வடமொழி இரண்டிலும் இணையில்லா நல்ல பயிற்சி உடையவர்; சிறந்த எழுத்தாளர், பேருரையாளர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் பேராசிரியராகப் பல்லாண்டு பணியாற்றிய பெரும்புகழ் பெற்றவர்.

ஆன்ற ஆரியப் பேராசிரியர்களால் பண்டிதமணி அவர்கள் மொழிபெயர்ப்புகளின் அருமை பெருமைகள் பாராட்டப்பட்டிருக்கின்றன. அரசியல் பெரியார் பலரும், பல்கலைக் கழக நல்லார் பலரும் பண்டிதமணி அவர்கள் புலமையையும் நுண் மதியையும் பாராட்டி, "மகாமகோபாத்தியாயர்" "பண்டிதமணி" முதலிய சிறந்த பட்டங்களை அவர்களுக்குத் தந்துள்ளதே அப் பெரியாரின் ஆன்ற புலமைக்குச் சான்றாகும். வாழி கதிரேசக் கலைமணியின் மாண்புலமைப் பெரும்புகழ் நம் தமிழகத்தில்.

---

# மாபெரும் புலவர்

[திரு. அ. கிருஷ்ணமூர்த்தி, M.A., B.L., B.O.L. (Hons) M.E.S.]

இந்த நூற்றாண்டில் மறைமலையடிகட்கு அடுத்தபடி தமிழோடு வடமொழியும் வல்லவராய் விளங்கிய மாபெரும் புலவர் அறிஞர் பண்டிதமணியவர்கள். இலக்கியநயம் காண்பதில் ஆராத ஆர்வமும், ஆழ்ந்த திறனும் படைத்தவர். சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருவாசகம்—இம்மூன்றன் நயங்களைத் திரக் கண்டு திளைத்தவர். இலக்கிய இன்பத்தில் சுவைப்புலமை தெளிந்த ஒரு நல்லாசிரியர். அவ்வின்பத்தை அவர் விளக்கும்போது, கேட்போர் மட்டுமல்லர்; பரந்து தெளிந்த அவர் முகமண்டிலம், அதில் திளைத்துக்கிடப்பதையுங் காணலாம். நூலின் சுவை, அவர்தம் முகத்தின் களை—இவ்விரண்டையும் சேர்த்துக் காண்பது ஒரு தனிச்சுவை.

மறைமலையடிகள், எம். எல். பிள்ளை, நாட்டார் ஐயா, திரு. வி. க., பண்டிதமணி முதலிய பெரும் பேரறிஞர்களைக் கண்ணாரக்கண்டு, பழகி, அவர்கள் திடீரென விரைந்து விரைந்து மறைவதை எண்ணும்போது, நெஞ்சு ஏக்கமாகிறது, இதற்கு முடிவு எங்கே?

---

# நான் அறிந்த பண்டிதமணி

[வித்துவான், திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார்]

இவர்களை 46 யாண்டுகளாக அறிவேன் 1907-ல் யான் மதுரைத் தமிழ்ச் சங்கச் சேதுபதி செந்தமிழ்க்கலா சாலையில் சேர்ந்து தமிழ்க்கலை பயின்ற பொழுது இவருடன் நல்ல தொடர்பு கொள்ள நேர்ந்தது. மதுரை விவேகபாநு பத்திராசிரியராகவும் சிறந்த கவிஞராகவும் சொற்பொழிவாளராகவும திகழ்ந்த திரு. மு. ரா. கந்தசாமிககவிராயர் அவர்கள் மனையில் இவாகளைக் கண்டு அளவளாவி மகிழ்ந்துளேன். இவ்விருவாகளுடன் தொல்காப்பியப்பாயிரவிருததி ஆசிரியர் சோழவநதான திரு. அரசஞ்சண்முகனாரும் எனக்கு இனியராயினர். இவர்கள் மறுப்புரை எழுதுஙகாலத்து எளியேன்பேரிலும் வெளியிட விழைநதனர். 1913-ல் நம் பண்டிதமணி கதிரேசன்செட்டியா ரவர்கள் பள்ளத்தூர் சன்மார்க்க சஙகத்துத தமிழாசிரியராக என்னை அனுப்பி வைத்தனர். அவர்கள் ஆதரவினால் செட்டி நாட்டிலுள்ள பல சங்கங்கட்கும், மேலைச்சிவபுரிச் சன்மாாக்க சங்கத்திற்கும் சென்று சொற்பொழிவாற்றும் பேறுற்றனன்.

பின்னர் மதுரையில் வேலைபார்த்த காலத்திலும், நெல்லையி லுள்ள கல்லூரிகளில் தமிழாசிரியராக வேலைபார்த்த காலத் திலும், பண்டிதமணி அவர்களின் சொற்பொழிவுகளையும் நுண் பொருள் விளக்கங்களையும் நகைச்சுவையாடலையும் கேட்டு மகிழும் வாய்ப்புப்பெற்றுளேன். திருநெல்வேலித் தென்னிநதிய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகச் சார்பில் அவாகள் நிகழ்த்திய சொற்பொழிவுகளுக்குப் பாராட்டு நன்றியும் பகர்ந் துளேன். பண்டிதமணிஅவர்கள் தென்மொழித் தோச்சிக் கேற்ற அளவு, வடமொழித்தேர்ச்சியும் நன்கு வாய்ந்தவர். ஆங்கிலமும் பயின்றவர். எழுத்துநடையும் தொடையும சொற் பொருள் விளக்கமுஞ் சிறப்பாகக் கொண்டவர். சிரித்துச் சிரித் துப் பேசியே மாறுபட்டவரையும் வயப்படுத்தும் திறத்தினா.

சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ம் நாள் குன்றக்குடி ஆதீனத்தை அடைந்திருந்தகாலை, நம் பண்டிதமணி அவர்களைக் கண்டளவளாவும்பேறு கிட்டியது. பலரிடையே என்னைத் தனியே அழைத்து 'பண்டுகண்டமேனி மாறாது வாழ்பவன் நீ' என்று மகிழ்ந்துரைத்தனர். இன்னார் இன்னும் பல்லாண்டுகள் தமிழ்நாட்டில் தங்கியிருப்பின் தமிழ் வளர்ச்சிக்கும் சமய வளர்ச் சிக்கும் ஆம் பலநற்பணிகள் செய்யப் பெறலாம் அண்ணமலைப் பல்கலைக்கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகச் சிறந்த

இவர்கள், மகாமகோபாத்தியர் என்ற பட்டத்தையும் பெற்றுத் திகழ்ந்த தமிழ்க்குடித்தோன்றல். முதுபெரும் புலவர். பண்டித மணி என்ற பட்டங்களும் உள. இவர்கள் இளவல் சின்னையாச் செட்டியாரவர்களும் தம் குலவளர்ச்சிக்கான திருத்தம்பல செய்தவர். இத்தகைய மணிகளைத்தந்த நம் முத்துக்கருப்பச் செட்டியார் குலம் குலவி ஓங்குக.

வானுடழைக்க மகிபாலன பட்டிவரும்
தேனூர் மொழிவளஞ்சேர செயகதிரோன்—ஏனே
புலவா உளஙகவலப் பூதலததோர் வாட
நிலவுலகை நீததனனுள் சேர்ந்து.

---

# தமிழ்ப் பேரறிஞர் மறைவு

[திரு. ஆ. பழ. குமரப்பன்]

௧. முதுபெரும் புலவர் — பண்டிதமணி — மு கதிரேசச் செட்டியாரவாகள், ௧௯௫௩ - ஐபபசி - ௭ல (24—10—’53ல்) சனிக்கிழமை மாலை ௪-௧௫-மணிக்கு மறைவுற்றார்கள என்ற செய்தி கேட்டு மிகுநத துயரடைநதேன அவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டினைத் தமிழ்நாடு என்றும் மறவாது. வடமொழி கற்றபயனால், தமிழில் சிறநத முறையில் மொழிபெயர்தது நூலகள் வெளியிட்டுள்ளார்கள்.

௨. அவர்கள் மறைந்துவிட்டாலும் புகழ் மறையாது. அன்னாருக்கு ஒரு நினைவு ஏற்படுதத முயற்சிக்கப்படுகிறது. அண்மையில, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. மறைந்த துக்கம் முழுதும் நீங்காத பொழுதில் மற்றொரு தமிழறிஞரை இழந்து துடிக்கின்றோம். தமிழன்னை - ஒருவர்பின் ஒருவராகத் தன் மக்களை இழந்து ஆறாத்துயரடைநது வருகின்றாள். “செந்தமிழ்ச்செல்வி,” இதழாசிரியாகளில் தலைமையேற்று வந்த நம் பண்டிதமணியை என்று காண்போம். ‘செல்வி’-தன் தலை மகனை இழந்து வருந்துகின்றாள.

---

# பண்டிதமணியார் தனிச்சிறப்பு

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரே. இராமசாமிபிள்ளை]

அருங்கலைஞர் பண்டிதமணி; வடமொழி தென்மொழிப் புலவர் பண்டிதமணி; பண்டிதமணியெனின், தமிழகமல்ல! வடநாடும்! ஏன்? கடல்கடந்த நாடுகளும் அறியும்! அவர் தோன்றிய நாடு பழம் பெருமை வாய்ந்தது 'யாதும ஊரே யாவரும் கேளிர்' என்னும் பொதுநெறியை உலகினர்க்கு உணர்த்திய கணியன் பூங்குன றனார் தோன்றிய நாட்டில் மகிபாலன்பட்டிச் சிறூரில் பேரறிஞராகத் தோன்றிய பெருமை நம பண்டிதமணியாக்குரியது அவர் 24-10-53 ஆம் நாள் நம்மைவிட்டுப் பிரிந்தார். நாளிதழ்கள் வாயிலாகக் கண்டேன்; மனந்துணுக்குற்றேன்; நீரூற்றிருநதொழுகின என் நெடுங்கண் கள்; வருந்தினேன், மாழ்கினேன்; உலகம் நிலையற்றது, அஃது தாய்தாய்க்கொண்டேகும் அளித்து, இயற்கை அதுவேயெனத் தெளிந்தேன். ஆயினும்,

பண்டிதமணி கதிரேசனார் தம் மலர்நத மலர்முகம்; அகன்ற நெற்றி, திருநீறகலா அதன் திருத்தோற்றம்; மென் கட் பார்வை; இனித்தமொழிகள்; இன்றமிழுருவம் இவை என் கண்ணினும் காதினும் விட்டகன்றில 'என்றினி அவரைக் காண்பேம்! எக்கால் அவர் தமிழ்முழக்கம கேட் பேம்!' என என்மனம் மீண்டும் மறுகி மறுகிச் சுழன்றது.

வள்ளல் அழகப்பா மகள் உமையாள் திருமணம் உலகம் அறிந்த பெருமைக்குரியது; அதன் சிறப்பைக குறித்துக் கோட்டையூர் நகரத்தார் பாராட்டு வழங்கினர். அன்று பண்டிதமணியார் பாராட்டுப் பேச்சு; யானும சென்றிருந்தேன். இராசா சர் தலைமையின்கீழ் நிகழ்ந்தது. அன்று இரவு பண்டிதமணியார் தங்கல், அழகப்பா தமையனார் இல்லத்தில். அன்று இரவு முழுதும் பண்டிதமணியார் உரைநடை நிகழ்ந் தது. அப் பேச்சில் வள்ளல்கள் நள்ளி பாரி காரி ஓரி முதலியோர் காட்சியளித்தனர்; கபிலரும் பரணரும் நக்கீரரும் தோன்றி னர்; அகமும் புறமும் அவர்தம் நாவிடைத் தவழ்ந்து தவழ்ந்து வரலாற்றை வரைந்து காட்டின. பல ஆண் மக்கள் பெண்மணி கள் இன்பத தேன் வந்து காதிற்பாய உளமகிழ்ந்திருந்தனர். இத்தகைய அரிய கருத்துநயம பற்றிய பேச்சை வேறியாரிட மும் காண்பது அரிது. நான் வியந்து வியந்து மகிழ்ந்தேன். அந்நாள் வருமோ? என மெலிகின்றேன்! பண்டிதமணியாரின் ஆருயிர், சிவபெருமான் திருவடிக்கண் இயைந்து இன்புறுவதாக.

---

# இரங்கலுரைகள்

பண்டிதமணி புலமையில் தாமே தமக்கு நிகராய்த் தமிழகத்தில் வாழ்ந்த முதுபெரும் புலவர் அவரது பிரிவால் தமிழர்கள் இலக்கிய நயத்தை இனிதுரைக்கும் சொலலேருழவரை இழந்தனர். சைவ உலகம் சமயநூல்களுக்குப் பேருரை வழங்கும் பேராசிரியரை இழந்தது.

வி. சிவக்கொழுந்து.

மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் 'கால னென்னுங் கண்ணிலி யுய்ப்ப—மேலோ ருலகம் எய்தின' செய்தி நம் தமிழகத்தைத் திடுக்கிடச் செய்துவிட்டது. அவர்கள் எழுதத் தொடங்கிய திருவாசகவிரிவுரை முடியும்வரையில் இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. 'வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது' உடல் என்பது உறுதியாயிற்று. பேராசிரியர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலான பண்டை உரையாசிரியர்களோடு ஒருங்குவைத்தெண்ணத்தகும் அப்பெரியார் தம் தமிழ்த்தொண்டும சமயத் தொண்டும் முடிவதற்குள் காலஞ்சென்றது பெரிதும் வருந்தத்தக்கது. அவர்களது தூய ஆன்மா சிவபெருமான் திருவடிநீழலில பேரின்பப் பெருவாழ்வு எய்துவதாக.

T. V. சதாசிவ பண்டாரத்தார்.

தமிழ்ப்பேரறிஞர்கள், ஒருவர்பின் ஒருவராக மறைந்துவருவது தமிழகத்தின் தீயூழேயாகும்.

துன்பப்படுதற்கும் ஆறுதல் பெறுதற்குங்கூட இடைவெளி கிடைக்காது அடுத்தடுத்து அறிஞர்கள் மறைவது வருந்தக்கூடியதே யாகும்.

மறைமலையடிகளும், திரு. வி. க வும், பண்டிதமணியும் தமிழ்நாட்டின், தமிழ்மொழியின், தமிழ்மக்களின் ஒப்பற்ற தலைவர்களாவார்கள். அடுத்தடுத்து இம்மூவரையும் தமிழகம் இழந்துவிட்டது.

பண்டிதமணி இக்காலப் புலவர்பெருமக்கள் அனைவர்க்கும் தலைவராய் விளங்கிச் செயதற்கரிய நூல்களைச் செய்துதந்து பேரறிவுக் களஞ்சியமாய், பெரும பேராசிரியராய்த் திகழ்ந்தவர்கள். இழந்தோம்!

சைவப் பேராசிரியரும், தமிழ்ப் பெரும்புலவரும் ஒழுக்கத்தின் உயர்விடமுமாக இருந்த தூத்துக்குடி அறிஞர் சிவகுருநாதபிள்ளை அவர்களும் மறைந்தார்கள் என்ற செய்தி ஒன்றும் இன்று வந்திருக்கிறது.

மறைந்த அறிஞர்களுக்கு வருந்தி அழுவதற்குத்தான் நாம் வாழ்ந்து வருவதுபோலும். மெல்ல நகர்ந்துசெல்லும் காலம் ஒன்றுதான் நமக்கு ஆறுதல் அளிக்கவேண்டும்.

கி. ஆ. பெ. விசுவநாதம்.

பண்டித மணியவர்களின் மறைவு தமிழருள்ளத்தை வருத்துகின்றது! பண்டை முறைக்கேற்ப இலக்கிய இலக்கண சமய நன்னூற்களை ஐயந்திரிபற ஓதியுணர்ந்து தண்டமிழின் மேலாம் தரத்தைத் தமிழுலகிற்கு விளக்கிவந்த தனிப்பெரும்புலவர், தாம் மேற்கொண்ட திருவாசகத் தெளிவுரைத்தொண்டு முற்றுப்பெறுமுன்னரே நம்மைவிட்டுப் பிரிந்தது மிக வருந்தத்தக்க செயலாகும்! அணித்தே மறைந்த அண்ணலார் திரு. வி. க. பிரிவுத்துயர் இன்னும் தமிழருள்ளத்தில் தணியவில்லையே! இதற்குள் பண்டித மணியவர்கள் மறைவு நேரவேண்டுமா! அந்தோ தமிழகமே!

இருப்பதுபொய் போவதுமெய் என்றறிஞர் ஓதும்
பொருட்பொதிந்த சொற்சீர் புரிந்தும் - திருப்புகழார்
நல்லார் பிரிவால் நலியுமுளந் தேறுதற்கு
வல்லாரார் நல்லருளால் வந்து.

பண்டித மணியவர்களின் ஆன்மா பரமன் திருவடிநீழலில் என்றும் இன்புற்றிருப்பதாக! விடுத்துச்சென்ற தொண்டினைத் தொடுத்து முடித்தற்கு உரியாரை அந்நல்லான்மா தூண்டுவதாக!

வித்துவான் திரு, மே. வீ வே. பிள்ளை.

"பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ? தெளி"

என்பது தமிழ் மறையாம் திருக்குறளுக்கு வகுத்த உரை பல உளவெனினும் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பதைக் கூறுவதாயுள்ள பழம் பாடலாகும். அதுபோல அம்பலக்கூத்தன் அகமுவந்தெழுதிய திருவாசகத்தினுக்கு உரை கூறுதல் ஒண்ணாது என்று பலரும் கூறியிருக்க திரு. பண்டிதமணி அவர்கள் சதகம், நீத்தல்விண்ணப்பம் போலும் சில பகுதிகட்கு எழுதிய விளக்கம் சாலச்சிறந்துள்ளது. பலர் பலதிறப்படக் கூறினும் நம் திரு பண்டிதமணி அவர்கள் விளக்கத்தை எண்ணில்,

"பரித்த வுரையெல்லாம் பண்டித மணிசெய்
தெரித்தவுரை யாமோ? தெளி"

என்று என் நா மெய் கூறுகிறது. அவ்வுரையில் மாணிக்கவாசகர் உள்ளக்கிடக்கை, அருளின் திறம், இறைமாண்பு, சுவை இவைகளுடன் வாசகத்தேனை வாரி வழங்குகிறார் திரு. பண்டிதமணி அவர்கள். எஞ்சிய திருவாசகப் பகுதிக்கும் உரை எழுதவிடாமல் ஊழ்தடுத்து அவரை மறைத்துவிட்டது. இதனை நினைக்கில் நெஞ்சில் ஆற்றொணாத் துயர் மிகுகிறது.

ஆராய்ச்சி, சொல்லடுக்கு, நயம்படக் கூறல், சிலேடை மொழி, தமிழ்ப்பண்பாடு முதலியன அவர்கள் இனசொற்பெருக்கில் காணலாம். அவர்கள் புகழ் பல்லாண்டு வாழ்க!

—வித்துவான், தி. மு. சங்கரலிங்கம்.

Prof. R. Visvanatha Aiyar, Hon. Curator, Mahamahopadhyaya Dr. V. Swaminatha Aiyar Library, Adyar, writes :—

Late Mahamahopadhyaya Pandithamani Katheresa Chettiar.

Another veteran has passed away. The Tamil literary world has become very poor by the demise of the late Mahamahopadhyaya and closes the small line of Mahamahopadyayas among Tamil Pandits. He was first Pandit of the traditional type who was called upon to occupy the chair of Professorship of the language in an University, teaching Honours classes. He occupied several distinguished positions in the Academic world and in all of them acquitted himself with great credit. His scholarship in early Tamil classics was profound and his knowledge of Kavya and Puranic literature was unsurpassed. His discourses on literary and religious subjects and his writings on them revealed his deep learning, analytic mind and pure heart. His lectures were always heard with rapt attention. His translation of Sukranithi and Mricha-Katika show his scholarship in Sanskrit and his love and admiration for that language. His capacity for versification and writing original poems is revealed in several of his contributions. Deeply soaked in Saivite philosophy and literature his writings on religious topics were real feasts to students of religion. Late in his life he began his commentary on the great Saiva work i.e. Tiruvachagam and called it Kadirmani Vilakkam but he could publish only 2 volumes of this great work during his life-time. His love for teaching was so great that he founded an Oriental College at his own place and was its administrator and principal to his end. His genial temper and humorous speech and his tender heart have always attracted his friends and students towords him. Such a person we have lost to-day. May his soul rest in peace.

# பிரிவிரங்கற்பா

[பெருஞ்சொல் விளக்கனர், திரு. அ. மு. சரவண முதலியார்.]

பொற்பாரும் பூங்குன்ற நாடென்னும் புகழ்சார்ந்த
புனித வைப்பாம்
நற்பாரோா பாராட்டும் நலஞ்சார்ந்த நாடதனுள்
நம்முன் ஞோர்கள்
அற்பாரும் தவச்சிறப்பால் அருங்'கணியன் பூங்குன்ற
ஞர்'என் கின்ற
சொற்பாவும் பொருளுணரும் நுண்புலமை யுடையோன்முன்
தோன்றி ஞனல. (1)

சங்கஞ்சார் பெருமகனும் அப்புலவன் தோன்றியநற்
சதுரா லோங்கித்
துங்கஞ்சார் 'மகிபாலன் பட்டி'யெனும் நற்பதியுள்
தூய தான
தங்களுசார் தனவணிகர் மரபினிலே நாம்செய்த
தவத்தின் சார்பால்
எங்கும்சார் பெருமபுலவன் தோன்றினன்பேர் 'கதிரேசன்'
என்பர் வாழி. (2)

கல்லூரி களிற்பல்லாண் டொழித்துமிகக் கைப்பொருள்கள்
கழித்துங் கற்ற
நல்லூழில் பட்டதா ரிகள்பலரும் நாவிஞல்
நயநது போற்றும்
வல்லூரும் ஒலிசேரும் வடமொழியில் இயற்கையொலி
வளத்தா லோங்கிப்
பல்லோரும் போற்றுநம தமிழ்மொழியிற் புலமைநிறை
பண்பன் ஆனன். (3)

காவியத்தின் சுவைகண்டார் சாத்திரத்திற் செல்வதிலை
கவிஞு ரந்நூல்
மேவினர்கள் காவியத்துட் புகுவதிலை இலக்கியத்தை
விரும்பிக் கற்போர்
நாவினுக்கும் உணர்வினுக்கும் சுவைபயவா இலக்கணமேல்
நடுக்கங் கொள்வார்
பாவியற்றும் வன்மையென்ப தித்துணைக்கும் வேறுய
பண்பிற் றம்மா. (4)

கற்றவருட் பலரவையில் அஞ்சாது தாம்கற்ற
    கசடி லாத
பொற்புடைய பொருளெடுத்துக் கேட்போர்கள் உளங்கொளவே
    புகலு மாற்றல்
சற்றுமிலா ராகியே இருத்தலையும் நாமறிவோம்
    தமிழாம் அன்னை
பெற்றதொரு மகவிடத்திங் கிக்குறைகள் இல்லாத
    பெற்றி கண்டாம். (5)

'அம்மகவு யார்' என்ன வினவுவனேல் தமிழ்மொழியை
    அகலக் கற்ற
செம்மையுறு புலவர்களின் கடுஞ்சினத்துக் கிலக்காவேன்
    தீந்தேன் சொல்லால்
நம்மையெலாம் பலசபையில் தலைவராய் மகிழ்வித்த
    நன்மை யாளன்
இம்மையிலே யாங்காணக் கிடைக்காப்பண் டிதமணியாம்
    எங்கோ மானே. (6)

'தமிழ்க்கிழவர்' எனுந்தொடரை இரட்டுறவே மொழிந்துகொளத்
    தக்கோ னைய
இமிழ்க்கடலே யனையதமிழ்ப் புலமையினில் இவ்வுலகில்
    இணையி லாத
தமிழ்க்கடலாம் 'டாக்டர்' எனும் பட்டங்கொள் சாமிநா
    தைய ராலே
சிமிழ்ப்புடைய 'பண்டிதர்க்கு மணி' யென்னும் பட்டமதைச்
    சிறக்கப் பெற்றோன். (7)

'செட்டிநாட் டரச'ரெனும் பெருவள்ளல்" அறங்கருதிச்
    சிறந்த செல்வம்
கொட்டிநாட் டியஅண்ணா மலைப்பெயர்சார் கல்லூரி
    கோதில் கீர்த்தி
எட்டியே அடைவதற்குத் தமிழ்ப்பேரா சிரியராய்
    இருந்து பல்லாண்(டு)
ஒட்டியே பணிபுரிந்த பெருமைதனை யாவரே
    உரைக்கற் பாலார். (8)

அரசியலார் அளித்த 'மகா மகோபாத்தி யாய'வெனும்
    அருமைப் பட்டம்
சிரசினிலே தாங்கிநின்று பல்புலவர் பாராட்டும்
    சிறப்பாம் கல்விப்

புரசலிலாத் தகுதியினுற் பெற்ருேன்காண் உயிர்க்கருளும்
பெண்ணேர் பாகன்
கரைசெய்யா தருளுமலர்த் திருவடிக்குப் பேரன்பன்
கருதது நட்பன். (9)

அவன் தலைமை பூணுத அவையில்லை நம்நாட்டில்
அருமைத் தாய
அவனுனித்த அறிவினுல் ஆய்ந்துசொல்லும் பேருரையை
அடையாரில்லை
அவனிடத்திற் பழகியவன் ஆசிபெருப் புலவரிலை
அகன்றேர் ஆழ்ந்த
அவனறிவைப் பாராட்டாத் தமிழனிலை யெனிற்சொலவிங்
கியாதுண் டம்மா. (10)

அந்தோஅப் புலவர்பெரு மகன்மறைந்தான் எனிலிங்கே
அறிவூற் றுகும்
நந்தோமில் தமிழ்ப்புலமை மறைந்தது ஒன்ருேகாண்
நமது நாட்டில்
சிந்தாத காவியமாங் கடலினுளே குளித்துமிகச்
சிறந்த மேலாம்
உந்தாத பொருளாமுத் தெடுக்குமுறை ஒழிந்ததென்ருல்
உரைக்கற் பாற்ருே. (11)

பண்டிதர்க்கு மணியாகி மகாமகோ பாத்யாய
பட்டம் பெற்ற
திண்டிறல்சேர் புலமைமிகு நமதுகதி ரேசனும்
செல்வன் ஆவி
விண்டுவுக்கும் எட்டாத விமலனும் நமதிறைவன்
விருப்பாய் வந்தே
அண்டினரைத் தாங்குகின்ற ஆற்றல்மிகு திருவடியை
அடைக மாதோ. (12)

# இரங்கற்பாக்கள்

மகிபா லன்பொடு மதிபுன லணிந்தோன்
மகிபாலன் நகரில் வாழ்கென வுரைக்கப்
பண்டித மணிபெறப் பகர்ந்தான பிரமன்
பண்டித மணிதனைப் படைத்தனன மலரோ
தனவணி காவமா தரும்பணி மத்தெனத்
தனவணி காகுலந் தழைத்திட வந்தோய்!
மணடிசைப் பாக்கள் மழைபோல மொழிவதால்
மண்டிசை தோறும் வணபுகழ் நிறீஇ
மணணியல் சிறுமை மாயந்திடத் தமிழில்
மண்ணியல சிறந்தோர் வளமபெற வளித்தோய!
பளிங்குரை நீக்கி பாரோ ருவப்பப்
பளிஙகுபோற் பிறஙகப் பண்ணிய பெரியோய்!
மிருசசக டிப்போ நூற்பல நூலு
மிருச்சக மோர்ந்து மிளிரவே நல்கினோய!
மாணிக்க மாப்பால் தேனென மெய்யுரை
மாணிக்க வாசகந் தனக்கே வகுத்தோய!
மேலைச் சிவபுரி யிருந்திவண வந்து
மேலைச சிவபுரி தனிற்றமிழ் வளர்த்தோய!
புலிநகங் கிழித்தான் போதகத்துக் கீந்தோ
புலிநகா தனிற்றமிழ் போதித்த புலவோய்!
தமரெலாம வாடத தமிழ்மிகக் கற்றவுத
தமரெலாம் பாடத் தனையர்கள் ஏங்க
மருகியா கதற வளர்தனை வணிகர்
மருகியே பதற மாநிலம் விடுத்தே
எழுபத்தி யுடனே இறைவனைத் தொழுதே
எழுபததி யிரண்டாண டொருமதி யாமினில்
விசயவைப் பசியெட்டு விண்மீன் ஆரலில்
விசயஞ் செய்தீர்! விண்ணோடு நோக்கியே
சிவனடி யாரொடு சேர்ந்து
சிவனடி நீழலிற் சீர்பெற வாழ்கவே.

—P. V. அப்துல் கபூர் சாஹிப்,—புலவர்.

பண்டித நன்மணிமன் பண்பார் முதுபெரும்
கொண்டற் புலவன்மன் கோதிலமரா—கண்டவண்மன்
வாசகத்தேன் வாய்மைக் கதிரேசன் பூங்குன்றூர்த்
தேசன் சிவன்தாள்சேர்ந் தான்.

—திரு. ப. இராமநாதபிள்ளை.

சிவத்தைக் கண்ட மணிவா சகரின்
சிந்தை யுருக்கும் திருவா சகத்தை
அனைவரு மெளிதா யன்புடன் ஓதிடத்
தெளிவுரை யாத்த தீந்தமிழ் வள்ளல்

**பண்டித மணி**யெனும் பாவலர் மணியே!
செஞ்சொற் கோவையும் செவ்விய நுணுக்கமும்
இலக்கிய விளக்கமும் இலககண நுட்பமும
சிலப்பதி கார தேன்பொதி பேசசும்
யாண்டுக் காண்பேன் எவர்பால் நுகர்வேன்
மணணுல குனனை மதித்திடல காணிய
விண்ணுல கெய்திய வேட்கை போலச
சென்றனை; அதனுல் நாமுறு துன்பம
அளவிட லரிது சொல்லவும தீரா
என்னே! உலகம்! இருநதவா றென்னே!
மன்னே! **கதிரேசப் பேர்பெறு வோயே!**

**—நாஞ்சில், கா. கணபதி.**

அந்தோ! கதிரேசா ஆவிபிரிந் தாரென்ற
வெந்துயரச செயதி விரைவாகச—செந்தமிழிற்
பறறுடையார தம்மையெலாம் பற்றுபெருந் தீயாகச
சுற்றி எரிககும சுழனறு.

மகிபாலன் பட்டி மலாஞானக் கன்றாய்ப்
புகழார வாழ்ந்த புலமைத—தகையோராம்
காண்பரிய சீரதிக் கதிரேச ஞர்தம்மை
ஈண்டிழநதோம் எனசெய்க யாம?

காணுப் புதுமையெலாம் காட்டுவார போன்றினிய
நூனயஙகள் ஆயந்து நுவனறிடுவார்—வானமிழ்தம்
இன்றமிழே ஆக இயம்பும் புலவாபிரான்
இனறெங்கே சென்றார இசைந்து?

மாணிக்க வாசகத்தின் மாணபு பெரிதுணர
ஆணித் தமிழில் அழகுரைதான்—பேணிச்செய்
நறறொண்டு முற்றுமுன் நல்லோன் அருட்கழல்கள்
உற்றார உணாவில் உயர்ந்து.

மண்ணியலு நற்சிறுதோ மற்றொழிவில் நூலெல்லாம்
எண்ணி மொழிபெயாத்த ஏற்றத்தார்—தணணமிழ்தச
செந்தமிழே எண்ணிஅவை செப்பியெழில நூலெழுதும்
எந்தையார எங்காஞர் இன்று?

சிறுமை ஒழிந்ததெனச சிந்தை செருக்கும்
பெருமை இனிப்பெறுவ தெஙஙன்?—உரிமையினில்
தணடமிழா சீரதிக்காத தம்மிறுதி மூசசுவரை
எணணிஞா தமமை இழந்து.

சால்புயரும் குன்றமாய்த் தாவில் தமிழ்க்கடலாய்
மால்கடியு ஞான மலர்தருவாய்—நூலின்
பொருளாழம் தண்மைசெறி பூந்தடமாய் நின்றான்
அருளெண்ணி வாழ்வ தறம்.

**—கண்டறச்சேரி, தமிழ்க்கவி, சி. து. கன்னிசாமி.**

பண்டிதமணிப் பெயரோன் பரந்தகதிர்
    மணிவிளக்கம் பயிலத் தந்தோன்
கண்டிலமியாம் இவர்போன்று கவிநயனுஞ்சொல்
    ஆற்றலுடைக் கவிஞர் எனமேற்
மண்டிலத்தோர் ஏத்திடுஞ்சீர் மகிபாலன்
    பட்டிவளர் மணியான மாதோ!
தண்டமிழோர் வருந்திடவிண் தனைநண்ணினனே
    கதிரேசன் அந்தோ! அந்தோ!

—கே. குஞ்சிதபாதன்.

செட்டிநாடு வாழ்மக்கள் திலகமென வந்துதித்து
மட்டிலாத புகழுடைந்து மருவுதமிழ் நூல்நயத்தைக்
கட்டியுரை செய்யுமெங்கள் கதிரேசா! மண்ணீத்துக்
கெட்டியுறும் இறைவனடிக் கீழிருந்தாய்! என்செய்வோம்.

நற்பண்டிதமணிப்பேர் நல்லோய்! கதிரேசா!
அறபுமலி இன்தமிழ்ச்சீர் ஆர்ந்துமன்றுள — சிற்பரனார்
இன்னருளிற் கொண்டுபுகழ் எய்துமெழில் நின்னுண்மா
மனனுகப்பல் லாண்டு மகிழ்ந்து.

—வித்துவான் தி மு சங்கரலிங்கம்.

பண்டித மணியெனும் பட்டம் பெற்றவன்
தண்டமிழ்த் தொண்டுசெய் தகைமை வாய்ந்தவன்
எண்டிசை புகழ்கதி ரேச விற்பனன்
மண்டனின் மறைந்தனன் சீர்த்தி வாழவே.

உவரியுடைப் புவிபுகழ மகிபாலன் பட்டியில்வந் துதித்து மேலைச்
சிவபுரிச்சன் மார்க்கசபை நிறுவியருந் தமிழ்த்தொண்டு சிறக்கச் செய்து
தவமென "அண்ணாமலைப்பல் கலைக்கழகம்" வந்து தமிழ்த் தலைமை தாங்கி
இவணிருந்து தமிழ்வளர்த்த கதிரேச வள்ளலையின் றிழந்தோம் நாமே.

—தி. சங்குப்புலவர்.

செந்தமிழ்க் கடலுள் செல்லும் மரக்கலமாய்
வந்து மொழிகளெனவே வாய்த்த பலநூல்கள்
தந்து மறைந்தனரே தந்தை கதிரேசர்.

இந்த உலகத்தி லென்றும் அழிவறியாச்
சொந்த அறிவினிலே சொல்லும் திறமுமிக்க
சிந்தைக் குகந்தநூற் செல்வ மளித்தகன்றார்.

—V. சபாபதி.

அறந்தழைத்த உருவென்கோ! அணிபெற்ற
    தமிழினறும் சுவையே யென்கோ!
திறந்தழைத்த தமிழர்குல விளக்கென்கோ!
    தமிழ்நாட்டின் செல்வ மென்கோ!
உறந்தழைத்தே ஒளிபெருக்கி உலகாளும்
    சைவநெறி ஊற்ற மென்கோ!
பிறந்தபயன் பெற்றகதி ரேசவுனை என்னென்பேம்
    பிரிந்தாய் அந்தோ!

வே. சிவசுப்பிரமணியன்.

இருப்போரைத் தம்போன் றிரும்பெரிய ராக்க
விருப்போசான் றோமறைத லென்றும்—பொருப்பனைய
பணடிதர் தம்ம ணிபகாதி ரு. வி. க. வுடன்
கொண்டன ரேவா னுலகு. —ஆ. சிவலிங்கனார், மயிலம்.

அறிஞர் மறைமலையும் ஆன்றதமி ழன்பு
செறிந்த திரு. வி க. வும சோந்த—நெறியறிந்து
சென்றனையோ பணடித! செல்வக் கதிரேச!
நின்ற கவிநயத்தின் நீத்து.

—ச. சுந்தரேசன், புலவர் மாணவன், மயிலம்.

திருமங்கி பாலன் பட்டித் திருநகர்
மருவுநற் றோன்றல் மதிநல மிக்கோன்
முறைமையாக் கலைபல முயன்று பயின்று
இறைமை பெறுகதி ரேச எழிலோன்
பாண்டித் துரையுடன் பயில்தமிழச சஙகம்
யாண்டும புகழுற இன்மது ரைப்பதி
விளங்குறக் கணடோன் வெல்சொல் வல்லோன்
களஙகமி லுளததோன் கவிபொழி புலவோன்
வடமொழிப் புலமை வாய்ந்த தனமையால்
அடைமொழி மகாமகோ பாதஇ யாயன்
எனஅர சாஙகம ஈந்திடப் பெற்றோன்
கனவிலும் சிவனடி கருதும் செம்மல்
பண்டித மணியெனப் பாவலர் போற்றிடக்
கண்டுமா காணக கவின்தமிழ்ச சஙகம்
முனனிப் பட்டம் முதுபெரும் புலவா
உன்னத தநதிட ஏந்தல் முததைய
வள்ளல் சென்னையில் வழஙகிடப் பெற்ற
தெள்ளியன் செந்தமிழ்ச செல்வி திகழ்ந்திட
ஆசிரி யாகுழு ஐயனு யமாந்த
ஆசிலான் நூல்பல ஆக்கியோன் அண்ணு
மலைப்பல் கலைக்கழ கததின் மதிப்புறு
தலைமைத் தமிழ்ப்பெரும் புலமை தளிாக்கப்
பல்லாண் டமாந்தும் பலபதிச சென்றும
ஒல்காப் பேருரை ஓதிய பெரியோன்
இன்றெமைப் பிரிநது சென்றனன
என்றும் வாழிய இவனபுகழ் தழைத்தே.

—இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.

கதிரேசசெட்டியார் கல்வித் திறத்துக்
கெதிரே சொலஇயலா தென்று—முதியோர்
தெரிய வியக்கத் திருவா சகத்துக
கரியவுரை கண்டார் அவா.

திருவா சகததிற் சிலபகுதிக் கேற்ற
உருவா யுரையொன் றுதவும்—திருவார்
புலவாகதி ரேசர் புகழ்தானெங் நாளும
நிலவும் புவியில் நிலைத்து.

ஒவ்வார் நினைத்தான கதிரேச!
    உயர்தே வாரப் பாடல்களில்
ஒவ்வோ ரெழுத்தும ஒரிலிங்கம்
    ஓர்மின் ஓர்மின் என்றுரைத்த
செவ்வாய படைத்த சீமானே!
    தெள்ளு தமிழ்த்தோ கோமானே!
அவ்வா னவர்தாம் உனைக்காண
    அவாவோ டழைத்துச சென்றனரோ.

—வ சு செங்கல்வராய பிள்ளை.

பொருள்வணிகர் குலவிளக்கே! புலவர்தவப்
    பயனாகப் பூத்த மேலோய்!
அருளபெருகு திருவுளத்தோய்! தமிழ்த்தாயின்
    தலைமகனே! அணைந்தோர் தங்கள்
இருளகல ஞானவொளி இனிதுதவுங்
    கதிர்மணியே! எங்கள் கோவே!
தெருள்பெறுபண் டிதமணியே! எங்குற்றாய்
    நினைப்பிரிந்து திகைக்கின் றேமே.
அன்பர்திரு வாதவூ ரடிகளமணி
    மொழிப்பொருள்நீ ஆய்ந்து கூற
இன்புறக்கேட் டிடநினைந்து சிவபெருமான்
    நினக்கோலை எழுதி னானோ
நன்பொருளின் விளக்கமெலாம் அடிகளிடம்
    கேட்டுவர நடந்தாய கொல்லோ
மன்புலமைக் கதிரேச! நின்செலவின்
    காரணமென் வகுத்தி டாயே.

பகர்விசய வாண்டைப் பசிதிரிதி யைச்சேர்
திகதியெட் டிற்கார்த் திகைமீன—நிகழ்சனியே
எம்பண் டிதமணிப்பேர் ஏந்தல்கதி ரேசனார்
நம்பன் அடிமேவு நாள். —மீ. முத்துசாமி பிள்ளை.

அருமைமிகு கலைக்குரிசில்! ஆன்றமைந்த
    பெரும்புலவ! அறிஞர் ஏறே!
பெருமைமிகத் தமிழகந்தான பெறும்பே
    ராசிரிய! பெரிதும் நன்றே
இருமொழிகள் தேர்ந்தசைவ சித்தாந்த
    வித்தகராம இனிய சான்றோய்!
மருவருஞ்சீர்ப் பண்டிதமா மணி! நீயும்
    மறைந்தெமைஎன் வருந்த வைத்தாய்?
அன்புமிகு பெருந்தகையோய்! அரியபெரும்
    புலமையினோய்! ஆன்ற சான்றோய!
மன்பெருஞ்சீர் மணிமொழியார் வாசகத்தின்
    பொருள்விரிக்க வல்ல நல்லோய்!
நன்றுநின தரும்பிரிவால் தமிழ்நாடே
    மிகஇருண்டு நலமிழந்த
தென்புகல்கேம்? என்புரிகேம்? ஏதொன்றும்
    அறியகிலேம்! இனைகின் றேமால்!

—புலவர் முருகவேள், B.O.L.

# பொன் மொழிகள்

௧. மககள் யாக்கை உடையாரெல்லாரும தம் பிறப்பான் எய்தற் பாலனவாகிய உறுதிப்பயன்களை எயதுதற்கு இன்றியமையாச சாதனங் களாக உள்ளவை மொழியறிவும சமய ஞானமுமேயாம்.



௨. சன்மாரககம் அல்லது உண்மைநெறி யிற் சென்றுரே அழிவின்றி எஞ்ஞான்றும் ஒரே படிததாயும், பெறுதற்குரிய அதிகாரம உடை யாாகளே அன்றி ஏனையோரால் எயதப்படாத தாயும பேரினப மயமாயும உள்ள உணமை நிலையை அடைதற்குரியராவா.

௩. உயிாககு மாயாமலத்தினின்றும் அஃ தீட்டிய வினைக்கேற்ற உடலைக் கொடுத்து கன்மப் பயனை நுகாவிதது ஒழிததபினனா தன் திருவடி நீழலிற் சோத்து வீட்டினபததைத தருதற்குரிய இறைவன ஒருவன வேணடும்.

௪. ஒரு வண்டு தேன் நிறைந்த மலரில் வீழ்ந்து அமமதுவைத தேக்கற உணடு களிதது அதில் தோய்நதிருககும்பொழுது தான வேறு மது வேறு எனனும் வேறறுமை புணாவினறிக கிடததலபோல ஆன்மா பேரின்ப நுகாசசியில் தலைப்பட்டு தான் ஒரு பொருள் என்னும் வேற் றுமை புணாவின்றி ஒன்றுபட்டிருக்கும அந்நிலையே அத்துவித நிலை யாகும்.

௫. இவ்வுலகத் தோற்றததிற்குச சிவபெருமான் நிமித்த காரணமும் மாயை முதற் காரணமும், சிவசததி துணைக காரணமும ஆகும்.

௬. சிவபெருமான் ஈயும்தாதா ஆகலின், சிவபரமபொருளைப் பரம் பொருள் எனத தேற்றி, அவரைசசார விருமபித தன்னை அடுததாரை நேரே கொணடு செலுததும உண்மைநெறி சைவ சமயமே.

இச சன்மாாக்கமானது பிற நெறிகளையெல்லாம் தனககுச் சோபானமாக ஏற்று, அந்நெறிப்பட்டாரை முடிவில் தன்பாற் சேர்ததுக் கோடலானும், பிற நெறிகள் இஙஙனமின்றி ஒனறையொன்று வெறுதது ஒதுக்குதலானும் இச சைவசிததாந்த சன்மார்ககமே சனமார்க்கம என்பது உள்ளஙகை நெல்லிக்கனியாம்.

சததை அறிதற்குரிய நெறி சன்மாாக்கம். சத்து - சிவம். இது உள்ளது என்னும் பொருளது. மெய்கண்ட தேவா திருவாய் மலாந் தருளிய வாாத்திக உரையில "இனி இவவிரண்டு தன்மையும் இன்றி வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் என் றுணாதற்பாற்று" என்று காணப்படுகிறது.

தொகுத்தோர்:

**பெருநாவலர், பு. சி. புன்னைவனநாத முதலியார்.**



சித்தாந்தப் பேராசிரியர்

ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள்

தோற்றம்
1873

மறைவு:
30-10-1953

[பக்கம்: ௧௫௭

# திருவடிப்பேறு எய்திய சிவகுருநாதர்

சித்தாந்தம்

“சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடும்ஐ யாறன் அடித்தலமே.”

—௪. ௯௨ - ௧.

மேற்காணப்பெறும் திருமுறைத் திருமாமறைத் திருப்பாட்டுத் திருநாவுக்கரசு நாயனாரால் அருளிச் செய்யப்பெற்றது. இதன் பொழிப்புரை வருமாறு: மண்டிலமாகக் காணப்பெறும் அரவும், அதற்கு அஞ்சும் பிறையும் ஓரிடத்தே அஞ்சுதலின்றி இருக்கும்படி தலையிற்சூடித் திருக்கூத்தியற்றும் திருஐயாறன் திருவடி சுட்டறிவினாலும் சிற்றறிவினாலும் எண்ணுதற்கு அரியன. திருவருளின் துணையாம் முற்றறிவினால் எண்ணுபவர்க்கு எங்கும் இல்லாததோர் பேரின்பமாகிய சிறந்தசெவ்விய தேன்வழிந்து பொழிவன, இறவா இன்பப் பெருவாழ்வாம் பெரும்பேறு நல்குவன; தொன்மையிலேயே மன்னுயிர்களைப் பற்றிப் பின்னிக்கிடக்கும் மிக்க இருளாகிய மலச்சார்பால் அம்மலம் அகல அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் பிணித்துப் பிறப்பு இறப்பு என்னும் எல்லையில் பெருங்கடலகத்துச் சுழலுமாறு செய்யும் பழவினைத் தொடக்கினை அறுப்பன. அத்திருவடியானது அரியன, பொழிவன, கொடுப்பன, தீர்ப்பனவாகிய திருவருளைச் செவ்விவாய்ந்த ஆவிக்குப் புரியும் தன்மையது. சுட்டறிவு - பாசஞானம். சிற்றறிவு - பசுஞானம். முற்றறிவு - பதிஞானம்.

இப்பேற்றினை முற்றாகப்பெறும் தன்மை சைவசித்தாந்தத்தே தான் தெளிவாக அருளப்பெற்றுள்ளது. சைவசித்தாந்தம் எனினும் செம்பொருட்டுணிவெனினும் ஒன்றே. மேற்கூறிய தன்மைகளை ஒப்புக்கொண்டு ஒழுகிவரும் இயல்புவாய்ந்த ஒண்மையரைத் திண்மை வாய்ந்த சித்தாந்தத்தர் என்பர். இக்கொள்கையினர் வெவ்வேறு பெயரால் அழைக்கப்பெறினும் தொல்தமிழோர் செம்பொருட்டுணிவினர் என்றே செப்புவர். இவ்வுண்மை வரும் திருப்பாட்டான் உணர்க:

“சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன் றிலேசிவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து

முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகரெலாம் மூர்க்க ராகிப்
பித்தாந்த பெருமபிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவா இதுவென்ன பிராந்தி."
—சித்தியார். அ. உ - கக

இத்தகைய சித்தாந்தச செந்நெறிக்கண் ஒழுகி, நன்மாணவர் பலர்க்கும் ஓவாது ஓதுவித்து, அன்னுரையும ஒழுகப்பண்ணி உலகோராலும் உறவினராலும் ஒருங்கு புகழ்ப்பெற்றுத் திகழ்ந்து வீடுபேறெய்திய தவத்திருவினர் நம் சிவகுருநாதர். அவர்தம் வரலாறு வருமாறு :

பிறப்பு

இருபேராரமும், ஒரு பெரும் தென்றலும், வருநீர் என்றும் அருகாப் பொருநையும், மருவும திருநெலவேலி மாவட்டதது முட்டில் வளஞ்சேர் எட்டயபுரம என்றோ ஊர் உளது. அதனை ஆளும் குறுநிலமன்னர் இருபெரும் திருவும் ஒருங்குடை எழிலினா. அவர்தம அரண்மனைச சித்தமருத்துவத் தொண்டு புரியும் குடி ஒன்று உளது அது விழுமிய வேளாண் விழுக்குடி. வேளாண் விழுக்குடி என்பது புலவுத்துறந்து புலமை சிறந்து 'நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி, உலகு பொதியுருவத்து உயர்ந்தோன்' ஆகிய சிவபெருமான் திருவடிக்கு வழிவழி அடிமை செய்தொழுகும் பெருங்குடி. அதுவே தொன்மைத் தமிழ்க்குடி. தொன்றுதொட்டு நின்றுநிலவும் பொன்றலில்லா நன்றறிகுடி. இவ்வுண்மை வரும் திருவள்ளுவ நாயனர் திருப் பாட்டான் உணர்க :

"வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று." —திருக்குறள், கறுறு

அக்குடியில் சித்தமருத்துவர் நமசிவாயம் பிள்ளை என்றோர் தக்கார் வாழ்ந்தனர். அவர்தம் கற்பிற் சிறந்த மனைவியார் மாலட்சுமி அம்மையாராவர். அவர்தம் குடும்பத்தின் வேராகித் தோன்றியவர் நம் சீராளராகிய செல்வர் நமசிவாயம் பிள்ளை அவர்கள் கொள்கை சிறப்பு குறிக்கோள் குரவு என்னும் நான்மைத் தீக்கையுள் கொள்கை சிறப்பு குறிக்கோள என்னும் மூவகைத் தீக்கையும் முறையே பெற்று, உடையவர் பூசையும் உஞற்றி ஒழுகிவந்தனர். கொள்கை - சமயம். சிறப்பு - விசேடம். குறிக்கோள் - நிருவாணம். குரவு - ஆசிரியமுழுக்கு.

கொள்கை சிறப்பு குறிக்கோள் குரவுநான்
குன்றுசிவ தீக்கை உணர்.

அவர்தம் தவப்பேற்றால் 1873-ம் ஆண்டில் நம் பேராசிரியர் தோன்றினர். தந்தையார் திருப்பெயர் திருஐந்தெழுத்து. அதுவே தமிழ்த்தொன்மறை. அம்மறையினைப் பின்னாள் உலகினுக்கு ஞானமுறையாயுணர்த்தும் வாய்ப்பெய்தும் பெற்றிமையுடையராவர் என்பதை முற்குறியாய்ப் பெயரளவில் சூட்டியது போல் சிவகுருநாதர் எனப் பெயரிட்டனர். மறைமொழிதற்குத் தக்கார் குரவரே அன்றோ!

### கல்வி

தாயர்தம் மடித்தலத்தும் தந்தையார் தோள்தலத்தும் தவழ்ந்தும் இருந்தும் சேய்பொருள் நினைவோடு சிறப்புற வளர்வாராயினர். தந்தையார் சிவவழிபாடே இவர்க்குத் தவநிலையுணர்த்தும் சூழ்வாய் அமைந்து இன்புறுத்துவதாயிற்று. அவ்வின்பத்தாடே "பொருள் நீத்தம் கொளவீசிப் புலன்கொளுவ மனம் முகிழ்த்த, சுருள்நீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார்." எட்டு வயது நிரம்புமவரை எட்டயபுரத்திலே தமிழ்க்கல்வி பயின்றனர். பின் நம் பேராசிரியர் ஒட்டப்பிடாரம் என்னும் நகரில் தம் அத்தான் திரு. அறம்வளர்த்தநாத பிள்ளை அவர்கள் நடத்திய ஆங்கிலக்கல்லூரியில் ஆங்கிலக்கல்வி பயின்றனர். இக்கல்லூரியின்கண் ஒரு வகுப்பு மாணவரும் உடனுறு தோழரும் ஆயவர் அறந்திறம்பாமறஞ்சேர் ஆண்மைச் சிதம்பரனாராவர். இவர்களையே வ. உ. சிதம்பரனார் என்றும், நீர்ப்பொறியூர்தியாம் கப்பல் ஓட்டிய ஒப்பில் தமிழர் என்றும் உயர்ந்தோர் அனைவரும் ஒருங்கு புகழ்வர்.

### தொழில்

1889 முதல் 1891 வரை நம் பேராசிரியர் தூத்துக்குடியில் எஸ். ஏ. வி. பாடசாலையில் ஆசிரியராக இருந்து அருந்தமிழ்ப் பணி ஆற்றினர். அந்நாளிலேயே இவர்தம் அன்பும் அறிவும் ஆற்றலும் நூனவில்திறனும் பலராலும் போற்றப்பெற்றுள்ளன. மாணவர்களும் பேரன்புபூண்டு ஒழுகினர்.

### தொண்டு

இல்வாழ்வே சொல்லரிய தவ நல்வாழ்வாகக் கொண்டனர். ஆருயிர்த் தோழமையாய்த் திரு. தெ. ச. சுப்பிரமணிய பிள்ளையவர்களுடன் பயின்றுவந்தனர். 1889 முதல் தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் உறுப்பினராக இருந்து இயலும் பணி புரிந்தனர். தாமும் தக்க தோழருமாய்க் கூடி மிக்கோர் பலர்பால் சிவப்பிரகாசம் முதலிய செந்தமிழ்ச் சித்தாந்தத் தொன்னூல்களைப் பாடமுறையாகப் பயின்று வந்தனர். பாடம் பயிலும்

காலத்து நுண்மாண் நுழைபுலத்தோடு பயின்று முறையறிந் துரைக்கும் நிறையுணர்வேட்கையராய்த் திகழ்ந்தனர். இதுவே பண்பாட்டுக்குடியின் சார்புச் சிறப்பாகும். இதுவே பிறப்பின் சார்பு. படிப்பும், பண்பாடும், பணமும் என்னும் மூன்றனும் பெருமிதம் உண்டாம். அவற்றுள் படிப்பும் பணமும் புறச் சேர்க்கையால் ஆவன. பண்பாடு அகச் சேர்க்கையால் ஆவது. பண்பாடே குடிபபிறப்பு. அது 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்பதனுல் விளங்கும். அக்குடிப்பிறப்பே "அக னமர்ந்து ஈதலின் நன்றாகிய முகனமர்ந்து இன்சொலனுகும்" பேறு நல்கும்.

1892-இல் தூத்துக்குடியில் "சைவப்பிரகாசம் பிரசு" எனப்படும அச்சகத்தை நிறுவினர். 1944 வரை அதன் செய லாளராகத் தொண்டாற்றினர். சென்னை 'இநதுலகுலேச சங்கத்தின்' உறுப்பினராக இருந்தும் ஒல்லும்வகை ஓவாது செயல் புரிந்தனர்.

1887-இல் சென்னை சூளையில் விளங்கிய சைவத் திரு. சோமசுந்தரநாயகர் அவர்களைக் காணும் பேறுபெற்றனர். அப்பெரியார் தூத்துக்குடியில் செப்பரும் முப்பொருள் உண்மை யைப்பற்றிச் சிறந்ததோர் விரிவுரை ஆற்றினர்கள். அதன்கண் திருநெறி, சைவம் என்னும் பொதுப்பெயரான் அன்றிச் சித் தாந்த சைவம் என்னும் சிறபபுப்பெயரால் வழங்கப்படுதல் வேண்டும் என்றும்,

"பாசம் பசுபதி யாகும் இவைமூன்றும
பேசில் அனுதியென் றுந்தீபற
பெரியோர் சொல்வாரகளென் றுந்தீபற."

என்னும் நாயகரவர்கள் தாம் இயற்றிய திருவுந்தியார்த் திருப் பாட்டை அடிப்படையாகக்கொண்டு முபபொருள் உண்மை நிலை நாட்டினுர்கள். அந்நாள்தொட்டு அவர்தம் திருக்கோலப் பொலி வழகு நம் பேராசிரியர்தம் உள்ளக்கிழியில் உருவிழைத்த ஓவிய மாக அமைந்துவிட்டது, அவர்களே நம் பேராசிரியர்க்குச் சித்தாந்த ஆசிரியரும் ஆயினர். இவர்களே "சைவசித்தாந்த சண்டமாருதம்" என்னும் சிறப்புப் பெயரும் உடையராவர். அத்திருவுரு ஆளுடைய அரசர் திருவுருவை நினைவூட்டும் பெரு வுரு. அவ்வுருவின் சிறப்பு வருமாறு:

"தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே."

—கஉ. திருநாவுக்-கசo

இங்ஙனமே நம் பேராசிரியரவர்களும் வாழ்நாள் முற்றும் திருக்கோலப் பொலிவுடன் திகழ்ந்தனர். இவர்களும் கொள்கை சிறப்பு குறிக்கோள் என்னும் மூவகைத்தீக்கையும் பெற்று உடையவர் பூசையும் உடையராய் ஒழுகிவந்தனர். இப்பூசையினை இறுதிகாறும் இடையறா உறுதியோடு உள்ளும் புறம்பும் ஒத்து உளுற்றிவந்த ஒளிநெறிச் செல்வர்களுள் ஒப்பில் ஒருவராயினர்.

1907-இல் திரு. வ. உ. சி. அவர்களுக்குத் துணையாய் நாவலம் பொழிலாம் நம் இந்தியநாட்டு உரிமைப் பணியும் புரிந்தனர். அதன் பயனாக அந்நாளிருந்த அறமுறையோரா இறைமுறைபிழைத்த நிறையில் அரசினரால் ஓராண்டு நன்னடக்கைப் பிணையும் நல்கநேர்ந்தது. திரு. வ. உ. சி. பேரில் நடந்த அடாவழக்கை விடாப்பிடியாய் எதிர்த்து முன்னின்று சென்னை மேனிலைமுறைமன்றம் வரையில் நடத்தி நண்ணரிய இடைவெற்றியும் பெற்ற ஏற்றனையார் இவரென எவரும் புகழ்வர்.

சித்தாந்தத் திருத்தொண்டு

நம் பேராசிரியர் சித்தாந்தம் பயிற்றும் சீரிய திருத்தொண்டைச் சிறப்புற மேற்கொண்டனர். நாடெலாம் சித்தாந்தம் பயிலின் நன்னெறியும், அன்பருளும், ஒற்றுமையும், அறிவாற்றலும், ஆண்மையும், ஆக்கமும் பிறவும்தாமே கூடுமெனும் மெய்ம்மையைக் கொண்டனர். இவையெல்லாம் கூடச் செய்வதே நாட்டுப்பணியென நயனுறக்கொண்டனர். கொண்டு இடையறாது ஆண் பெண் பாலார் இருவர்க்கும் அவரவர் வாய்ப்புப்போல் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய மெய்கண்ட நூல்களையும், திருக்குறளாகிய செந்தமிழ்ப் பொதுமறையினையும், திருமுறையாகிய செந்தமிழ்ச் சிறப்பு மறைகளையும், தொல்காப்பிய முதலிய சங்கமருவிய பெருநூல்களையும் பலகால் பயிற்றிவந்தனர். சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய பொருள்நூல்களைப் பலமுறை பயிற்றி ஒவ்வொரு நூல்கள் முடிவிலும் விழாவும் பாராட்டும் விழைபொற்கிழியும் தழையப்பெற்றுள்ளனர். பல்வேறு பொருள்நூல் திறலோர்க்குப் பட்டங்கள் நல்குவது அவர்கள்தம் மெய்ப்புலமையினை உலகறிந்து, அவர்கள்பால் கற்று உய்தற்கும், அவர்களும் மேன்மேலும் கற்றல், கற்பித்தல், கேட்பித்தல், தான்கேட்டல் நன்றும் செந்நெறியில் ஒழுகுதற்கும் ஊக்கமும் எழுச்சியும் கிளர்ச்சியும் உண்டாம் எனத் தாமாகவே பனுவல் எண்ணி 1949-ஆம் ஆண்டு முதல் தம் பிறப்புநாளிலும் (எழுபத்தேழாம் ஆண்டுப் பிறப்பு) ஆண்டு நிறைவு நாளிலுமாகத் தம்மைப் பாராட்டும் பேரவை முன்பு

பல்வேறுவகைப் பட்டங்களைத் தக்கவாறு இருபாலாருள்ளும் நூற்றுக்கணக்கான்வாகளுக்கு நல்குவித்துள்ளாாகள்.

இவர்கட்குத் திருநெல்வேலி காலஞ்சென்ற தாசில் திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை யவர்கள், பி. ஏ. தலைமையில் தூத்துக்குடியில் நிகழ்ந்த பேரவையினரால் "சித்தாந்த ஆசிரியர்" என்ற பட்டமும், சென்னை மாகாணத தமிழ்ச்சஙகத்தாரால் "சித்தாந்தப் பேராசிரியர்" என்ற பட்டமும முறையே வழங்கப பெற்றன. இவர்கட்கியைந்த இபபட்டங்கள் இயல்பாகவே சித்தாந்தம் பயிற்றிச் சிறநத ஆசிரியரென மாணவராலும் பிறரா லும் அழைக்கபபட்டு வநத முன்னைய நிலையைப் பின்னரும விளக்குவவாயின. இது முறைமணததிற் காணபபெறும் மருகன் மருகியர் என்ற பண்டையிலுள்ள பெயரே பல்லோர் அறியப் புதுக்கியபான்மையை ஒக்கும். முறைமணம் அத்தை மகளும அம்மான் சேயும் ஒததியைந்த திருமணம ஆகும்.

திருநெல்வேலி சைவசித்தாந்த நூறபதிப்புக்கழகத்தின் நிறைவேற்றுக் கழக உறுப்பினராகப் பததாண்டு திகழ்நது பயன்மிகு பணிபல புரிந்துள்ளார்கள்.

பேரவைப் பெருந்தொண்டு

தமிழகத்திலேயே நெடுநாள் இடையறுது நின்று நெறி முறையாகத் தொண்டாற்றிவரும சைவசித்தாநத சபைகள் ஒரு சிலவே. அவற்றுள்ளும தலைசிறந்து விளங்குவது தூத்துககுடி சைவசித்தாந்த சபையே. இதன் இருகண் எனத திகழந்தவர்கள் திரு. தெ. ச. சு. சுப்பிரமணியபிளளை யவர்களும நம பேராசிரி யர் அவர்களும் ஆவர். திரு. தெ ச. சு. அவர்களுக்குப் பின் அவர்கள் திருமகனர் திரு சோமசுந்தரம்பிள்ளை யவாகளுடனும் நம் பேராசிரியர் தம் உயிரெனப்போறறி ஓம்பிவநதனா. அச் சபையின் அறுபத்தொன்பதாவது ஆண்டு விழாவும் அழகுற நிகழப்பெற்றது.

இச்சபைக்குத் தலைவர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் கேள்வியாளராகவும் ஆண்டுதோறும் தமிழகத்தின் பலபாகங் களிலிருந்தும், ஈழநாட்டிலிருந்தும, பிறநாட்டிலிருந்தும் வந்து கூடி அளவளாவிக்கொண்டும கொடுத்தும் பயன்பூண்டுள்ளார் பலராவர். அவர்கள் அனைவரும் நம் பேராசிரியரிடம் அளவிறந்த அன்பும் நன்றியும் பாராட்டும் அறிவுக்கலப்பும் உடையவராவர். நம் பேராசிரியரும் அவர்கள் அனைவர்பாலும் அன்னரே.

நம் பேராசிரியர் அகங்குழைந்தெழுதும் அன்பார்வ நண் புக்குக் கட்டுப்பட்டுப் பேச்சாளராகவும பெருந் தலைவர்களாக

வும் வந்து மீளும் இருபால் பேரறிஞர்களும் பலராவர். நம் பேராசிரியர் நகைமுகமும் புன்சிரிப்பும் இன்மொழியும் நன்றாற்றலும் யாவரையும பிணிக்கும நயமுடையன. அச்சபையின் பொதுக்கூட்டம, சிறப்புக்கூட்டம, நாயன்மார் திருநாள், பிற சிறப்புநாள், ஆண்டுவிழாப் பெருநாள் முதலிய எல்லா நாட்களிலும் திருமுறை மெய்கண்டநூல் முதலிய திருவருள் நூற்களின் திட்ப நுட்பச்செறிவுகள் திறம்பெறப் பல்லோரால் பேசிச் சிறப்பிககப்பெறும பாடங்கள், சிறுவர் சிறுமியர் வாயிலாகத் திருமுறைகள் பண்ணோடோதல், திருக்கோவில் வழிபாடு, திருமுறைத் திருப்பாட்டருசசனை எல்லாம் இனிதுற நிகழ்வது இவர்தம் பெருமுயற்சியான் என்க சுருங்கச்சொல்லின் தூததுக்குடியிலும் சூழ்நத பிறவிடங்களிலும் தமிழும் சிவமணமும் கமழ்வது நம் பேராசிரியர் பெருந்தொண்டே. இப் பேரவைச் சார்பாகப் புலவர் பெருமக்களுக்கு வழங்கிய பட்டமும், பாராட்டும் பலப்பல. பெருமக்களெய்திய சிறப்பினைச் சிறபித்து நிகழ்த்திய விழைவும் விருந்தும் அளவில.

ஊர்த்தொண்டு

நம் தமிழகத்துச் சென்னைக் கோனகர்தொட்டுக் குமரிமுனைவரையிலும், ஈழநாட்டுப் பல்வேறு ஊாகளிலும் நம் பேராசிரியரவர்கள் தலைமைபூண்டும விரிவுரையாற்றியும் செய்த தொண்டுகள் அளபபில. அவைகளை எஞசாது எடுததுரைப்பதற்கு இடனும் காலமும் பிறவும் ஈண்டுப்போதா எனினும ஒரு சில குறிக்கின்றாம் :

1936-ல் காஞ்சிபுரத்தில் நடந்த சைவசித்தாந்த மகாசமாச 31-ஆம ஆண்டுவிழாவிலும், பூவாளூர்ச் சைவசித்தாந்த சங்கத்து 27-ஆம் ஆண்டுவிழாவிலும், 1938-ல் கொழும்புமாநகர் விவேகாநந்த சபையின் 25, 26-ஆம் ஆண்டு விழாக்களிலும், 1939-ல் காரைக்கால் சைவசித்தாநத ஆசிரமத்து 5-ஆம் ஆண்டு விழாவிலும தலைமைதாங்கிச் சைவசித்தாந்தப் பேருரை நிகழ்த்தினார்கள். பாவன்மையும், நாவன்மையும பலராலும் பாராட்டப் பெற்றன.

ஆராய்ச்சி

நம் பேராசிரியரவர்கள் சென்ற நாற்பது யாண்டுகளாக நன்முறையில் சித்தாந்தநூல் பாடம் பயிற்றிவந்த காலங்களில் எடுத்து எழுதிவைததுள்ள குறிப்புக்களைத் துணையாகக்கொண்டு 1941-ஆம் ஆண்டு மேத்திங்களில் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாநத நூற்பதிபபுக் கழகத்தின் அறநிலையங்களுள் ஒன்றான தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின்சார்பில்

நடந்த மெய்கண்டசாத்திர மாநாட்டில் 'சிவஞானசித்தியார் ஆராய்ச்சி' என்னும் ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள். அஃது அந்நாள் செயலாளராகவும் கழக நிறுவலாளராகவும் விளங்கிக் காலஞ்சென்ற திரு. வ. திருவரங்கம்பிள்ளை முதலிய பல்லோராலும் பாராட்டப்பெற்று நூல்வடிவில் விரைவில் வெளிவர வேண்டும் என்னும் விழைவும் வெளிப்படுத்தப்பெற்றது. அவ் விழைவு திருவாவடுதுறைத் திருமடத்தம்பிரான் திருத்துணையால் 1949-ல் நூல்வடிவில் வெளிவந்துள்ளது அது தமிழன்பர்களாலும் சைவப்பெருமக்களாலும் பெரிதும் போற்றிப் பயின்று பயன்பெறப்பெறுகின்றது. சாத்திரம்—பொருள் நூல்.

நம் பேராசிரியர் அவர்கள்பால் பயின்ற நன்மாணவர் பல்லோருள்ளும் சிறந்த திரு இராம. அண்ணாமலைச் செட்டியார், திருமதி, சிவகாமி அம்மையார் முதலியோரால் நம்பேராசிரியரின் பல்வேறு ஆண்டுகளின் நினைவுமலராக முறையே நூலும் உரையுமாய் "அண்ணாமலையார் அரிய கட்டுரைகள்" "நால்வர் நான்மணிமாலை உரை" என வெளிப்படுத்தப்பெற்றுள்ளன. அவ்விரு பெரு நூல்களும் நம் பேராசிரியரின் பெருந்தகைப் பெரும்புலமையைப் பயின்றோர்வழி வெளிப்படுத்தும் நந்தாவிளக்கங்க ளாவன.

திருவடிச்சார்பு

நம் பேராசிரியர் அவர்கள் தம் எண்பத்தோராம் அகவை எய்திய மூன்றுதிங்களுள் முக்குற்றம் நீங்கி முழுத்தவ முனிவராய்த் திகழ்ந்த பண்டை நிலையிலேயே மூன்றுநாள் சுரநோயுற்றனர். அதுவும் அத்துணைக் கடுமையாக இல்லாமலிருந்தது. எனினும் அழியாவுயிர் அழியும் யாக்கையினின்றும் விளியும் என்பது மெய்யுரையன்றே! அம் முறையில் நம்பேராசிரியர் ஆருயிரும் 30-10-1953 காலை 4-30 மணிக்குச் சிவபெருமான் திருவடிநீழலை எய்திற்று. என்றும் அவ்வுயிர் இன்புற்றிருக்குமாக.

நம்மனோர்க்கு அண்மையிலிருந்து அறிவுரை பகர்ந்து எந்நாளும் எண்மையில் உதவிய ஈடும் எடுப்புமில்லாப் பீடுறு நன்றியை நாம் என்றும் மறவாது அவ்வழி ஒழுகிப் போற்றிப் புகழ்வோமாக! அவர்கள் என்றும் உடனுறைந்து உறுதி புணர்த்தி நல்வழிப்படுத்துதல் ஒன்மையதாயினும் நாமாக அன்னார் அறிவுறுத்தும் வழியில் செல்வதற்கும், நாம் பிறர்க்கு வழிகாட்டுவதற்கும் அவர்கள் பிரிவு இறையால் அமைத்தருளும் இயல்பேயாம். அம் முறையில் ஆறுதல் எய்துவதே நம்மனோர் பெருங்கடன்.

நம் பேராசிரியர் அவர்கள் "கழக ஆட்சிப் பொறுப்பாளரவர்கட்கு" எழுதிய திரு வி க அவர்களின் பிரிவாற்றுப் பரிவுரைப் பகுதியில் உள்ளதைக் காண்போமாயின், அவர் தம் ஆறுதலுரை எத்துணை ஆற்றலும் அழகும் வாய்ந்ததென்பதனைக் கண்டு உறுதி எய்துதற்கு உறுதுணையாம் என்பதில் ஐயமின்று. அது வருமாறு :

"பழந்தமிழ்த் தலைவர்களும், பண்புடையார்களும் ஒவ்வொருவராக விடுதிபெறுகின்றார்கள். வருந்தத்தக்கதுதான். உலக நிலையாமையை யாவரால் மாற்றமுடியும்?"

நம் பேராசிரியர் திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவடிக்கண் பேரன்புபூண்டவர்கள். சென்ற ஆவணித்திங்கள் திருவிழாவில் சென்று சேவித்துச் சிறந்த சொற்பொழிவும் ஆற்றியுள்ளார்கள். செந்தமிழ்க்கும் சிவநெறிக்கும், சித்தாந்தத்துக்கும் செய்த சீரிய தொண்டே உணர்வுரம், உளவுரம், உடலுரங்களை இறுதிகாறும் நல்கிக் காப்பதாயிற்று. அம்முறையை நாமும் பின்பற்றி நலமுறுவோமாக. அன்னார் பிரிவால் வருந்தும் மாணவர், சபையினர், குடும்பத்தினர் முதலாயினார்கட்கு நம் ஆறுதலுரை உரியதாகுக! செந்தமிழ்ப் பெரும் புலவர்கள் ஒருவர்பின் ஒருவராய், முறையே அடுத்தடுத்து மறைமலையடிகள், திரு. வி. க, பண்டிதமணி, நம் பேராசிரியர் முதலியோர் சென்றமையை ஈடுசெய்யத் திருவருளால் பலர் விளங்குதல் வேண்டும். அதனை எதிர்பார்ப்பதே இன்றைய தமிழன்னையின் தனித்தவம். அதுவே அப்புலவர் பெருமக்கள் அகமகிழும் செய்ந்நன்றி. ஆண்டவன் அருள்வானாக!

திருநெறியும் செந்தமிழும் சிறக்கவரும் செம்மல்
செய்யவட் டயபுரத்து நமசிவாயத் தார்க்கு
அருமனைவி திருமகள்பால் அரும்பிறப்புற் றுயர்ந்தோன்
அழகியதூத் துக்குடிச்சித் தாந்தப்பே ராசான்
பெரும்புகழான் சிவகுருவன் பெருகியமா ணவர்க்குப்
பேரன்பால் சித்தாந்தம் போதித்த வள்ளல்
தரும்பெருமான் சிவனடியைச் சார்ந்ததமிழ் ஆசான்
தனியின்பம் பெற்றுய்யத் தாளிணைபோற் றுவமே.

# கையறுநிலை

[சித்தாந்த பண்டிதர், ப. இராமநாதபிள்ளை, கழகப் புலமையாளர்.]

திருமந் திரமா நகர்வாழும் செல்வ வேளாண் குடிதழைக்க
வருமந் திரமாம் சிவகுருநா தப்பேர் மைந்தன் வாழ்வுற்றான்
பெருமந் திரமாம் சைவசித் தாந்த சபையின் பெருமதலை
உருமந் திரச்சுப் பிரமணிய ஒருவன் தன்னார் உயிரோனே.

உயிரும் உடலும் செம்பொருளின் துணிவும் தமிழும் எனவோர்ந்து
பயிலும் தோழர் பல்லோராய்ப் பயின்றார் பயின்ற பயன்பெறுமா
றெயில்சூழ் அகழி கடல்மாடம் என்னும் தூத்துக் குடிநகரில்
அயில்வேற் குமரன் திருவருளால் அனைவோர் தமக்கும் பயிற்றினனே.

பயிற்றும் தொழிலால் சித்தாந்தப் பேரா சிரியப் பட்டமது
குயிற்று மணியும் பொன்னும்போல் குணமார் குழாத்தோர் தாம்கூடி
வயிற்றுக் கீயப் படுஞ்சுவையின் வளததின் மேலாய்ச செவியமிழ்து
பயிற்றும் வள்ளால் பெறுகவெனப் பரிவால் நல்கிப் பரவினரே. ௩

பரவும் புகழ்சேர் சைவசித் தாந்த சபையின் பணிஎல்லாம்
நிரலே புரிந்து ஆண்டுவிழா நிறைவு நிகழ்த்த வருந்தலைவர்
கரவில் உளஞ்சேர் புரவலர்கள் கற்றுத் துறைசேர் புலவோர்கள்
விரவும் சுவைகொள் அவையினர்கள் விழையப் பணியும் புரிந்தனையே. ௪

புரியப் பாடம் புகல்வதுபோல் புகன்றாய் சிதறி யாராய்வு
தெரியப் படாத பெருநூலின் சீாமை அனைததும் தெரிவித்தாய்
அரிய பொருளே உனைப்பிரிந்து வருந்தும் அனைவோர் வருத்தமெலாம்
உரிய வுனக்கங் குரைப்பார்யார் உணர்வாய் 'இந்த மாநிலததே.' ௫

நிலத்தே மெய்யாய் நிலவும்மெய் கண்ட நூலும் திருமுறையும்
நலத்தேன் எனறு நவின்றனையே நல்லோர் பருக நல்கினையே
வலததோன் எறிங் குயர்ததவள்ளல் வாழும் கயிலை வரைப்பாலும்
சொலத்தே வாகச் சென்றனையோ தூயோய் வாழி தமிழுரைததே. ௬

உரையின் வளரும் தமிழ்த்தமிழும் உரவோன் சேரன் உரைத்தமைபோல்
வரையின் மேலாம் வடமலையில் வாழும் தமிழே மனக்கினிய
கரையில் பொருளாயக் கண்ணுதலோன் காது குளிரக் கனிந்துரைப்பாய்
வரையில் காலம் மலரடிக்கீழ் வாழ்வாய் வாழ்வாய் மகிழ்சிறந்தே. ௭

# சித்தாந்தப் பேராசிரியர்

[திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை, மதுரை.]

தூத்துக்குடி சித்தாந்தப் பேராசிரியர், ந. சிவகுருநாதப் பிள்ளை அவர்கள் மறைந்தார்கள் என்ற செய்தி இன்று பரவுகின்றது. சின்னாட்குமுன் திரு. வி. க. மறைந்தார்; அவர்க்குப்பின் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மறைந்தார் என்ற செய்தி இடிபோல் வந்தது. அது வந்த ஒரு கிழமைக்குள் தூத்துக்குடி சித்தாந்தப் பேராசிரியர், ந சிவகுருநாதப்பிள்ளை அவர்கள் மறைந்தார் என்ற செய்தி இடிமேல் இடி வீழ்ந்தாற் போல் வருகின்றது. பழுத்த சமய வாழ்வும் முழுத்த கேள்வியும் உடைய பெரியவர்கள் ஒருவர்பின் ஒருவராக மறைகின்றனரே! இஃது என்னையோ?

தமிழ்க்கு வரம்பாகிய தக்கோரும் சைவவரம்பாகிய மிக்கோரும் இவ்வாறு மறையின் தமிழும் சைவமும வாழ்க என வாழ்த்துவது என்னுவது? உள்ளம் வேதனைதானே எய்துகின்றது? தமிழ்மடந்தைக்குச் சென்னை திருமுடியும், செட்டிநாடு திருமார்பும, தென்பாண்டிநாடு திருவடியும் போல்வன. இம் மூன்றிடத்தும முறையே முடிமணியும் மார்பணியும் சிலம்பணியுமபோலத் திரு. வி. க.வும் பண்டிதமணியும சித்தாந்தப் பேராசிரியரும் தமிழ் அன்னைக்கு இதுகாறும தமிழ்ப் பணியும் சமயப்பணியும் சால்புடன் புரிந்து தமிழ்க்கு அணி செய்துவந்தனர். அவர்களது மறைவு, தமிழன்னை முடிமணியும மார்பணியும் சிலம்பணியும் கெடுத்து வருந்தும் கீழ்நிலையைக் காட்டி நினைக்கும் உள்ளத்தை நீராய் உருக்குகின்றது.

## கையறுநிலை

1. பெரியநெறி சித்தாந்தப் பேராசிரியர்மன்
அரியசிவ குருநாத அண்ணல்மன் ஐயன்மன்
உரியபொருள் பலவுணர்ந்த ஒருவன்மன் ஒழுக்கத்தால்
விரியவரு நலமெல்லாம் மிகவுடைய மேலோன்மன்.

2. சிலசொல்லிப் பலவுணர்த்தும் செம்மையோன் சிவம்பெருகும
தலம்பலவும் கண்டுயர்ந்த தகவுடையோன் தமிழ்ப்புலமை
நலவுரைகள் பலநிகழ்த்தி நயங்காட்டும் நல்லோன்மன்
அலகில்சிவ குருநாத அண்ணல் மறைந்தான்மன்னே.

3. திருஞான சம்பந்தர் திருவடியே தினம்பரவி
வருவோன்காண் மெய்கண்டவள்ளல்தாள் மறவான்காண்
பெருமுனிவன் சிவஞான யோகிநலம பேசுவதே
உருவாழ்வென் றோதுசிவ குருநாத உரவோனே.

4. சித்தியுரை தெளிப்பார்யார்? திருவுந்தி விரிப்பார்யார்?
அததுவிதப் பொருளதனை அகலவுரைத் திடுவார்யார்?
அத்துவா ஆறனையும அணிதிகழ அறைவார்யார்?
மெத்துசிவ குருநாத மேதக்கோய் மறைநதாயே!

5. திருமந் திரநகரில் செந்தூரில சிவநெறியில்
வருமந் திரமுறைக்க வழிததுணையாய் வந்தாயால்;
அருமநத சிவஞானம் அறியுநெறி எனக்குரைதத
பெருநதந் தையேநீயும் பிரிநதாயே மறைநதாயே.

6. பலகூறிப புலம்புவதென், பரவுசிவ குருநாதன்
நிலவுலகு நீத்ததனை நினைநதினிநெஞசே, அவன்தாள்
இலகுபிறை அணிந்தருளும இறைவனருட் பேரின்பம்
நிலவுவாழ் வதிலநிற்கும நீர்மையினை நினைகுவையே.

---

## என் உளங்கவர்ந்த ஒருவர்

[செல்லூர்க்கிழார், திரு செ ரெ. இராமசாமிபிள்ளை.]

சிததாந்தப் பேராசிரியா உயர்திரு. ந. சிவகுருநாதபிள்ளை யவர்கள் என உளஙகவாந்த ஒருவா. அவாகளைக கணடு அளவளாவிய பேறு பெற்றவன்யான. அவாகள பிரிவு, எனனைத திடுககிடச செயதது. அவாகள் பருவுடல் மறைவு, பொதுவாகத தமிழுலகததுககும, சிறப்பாகச சைவசமயத திருநெறிககும ஈடுசெய்யவொணணு ஒனறும். அவர்கள் எண்பதகவைப் பருவமூப்பெயதினும், அவாகள உடலில இளமை ஒழுகியது; அவாகள இருகணகளாகச சைவமும தமிழும நினறன அவர்கள் சொல்வன்மை, பாடஞ்சொலலும் திறம, பேராசிரியக் கிழமை ஆககிற்று.

அவர்கள் ஆருயிர், திஙகள்தலைவைதத சிவபெருமான் திருவடிப் பேறெய்தி மிளிரவதாக.

---

திருநெல்வேலித தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகததிற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அசசகததில், திரு. வ. சுப்பையா அவர்களால அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.